**அரசு ஊழியர்**

செப்டம்பர் 2019

மலர் : 40 இதழ் : 9

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## சூடா ஒரு கோப்பை சூப்

### நாம் நீக்க வேண்டியது!

வரலாற்றிலிருந்து
உண்மைகளை நீக்கினார்கள்!
மக்கள் வாழ்விலிருந்து
நிம்மதியை நீக்கினார்கள்!
சண்டைகள் ஓயாதிருக்க
சமத்துவத்தை நீக்கினார்கள்!
சதிகாரர்களை வாழ்விக்க
சமூகநீதியை நீக்கினார்கள்!
இவர்கள் தான் இப்போது
370ஐயும் 35ஏவையும்
நீக்கியிருக்கிறார்கள்!

உறக்கத்தையும்
உள் முரண்பாடுகளையும்
உடனே நாம் நீக்காவிட்டால்
அவர்கள், நம்மிலிருந்தே
நம்மை நீக்கிவிடுவார்கள்!

**– ஆரூர் புதியவன்**

# தடைகளை தகர்த்தெறியும் தஞ்சை தரணி மாநாடு

மதுரையில் நடைபெற்ற நமது சங்கத்தின் மாநிலப் பிரதிநிதித்துவப் பேரவைக்கு பிறகு தமிழக அரசு ஊழியர்களின் பணி நிலைமைகள் குறித்தும், அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் குறித்தும், அரசு கண்டும் காணாமல் இருக்கும் நிலை குறித்தும், ஊழியர்களின் பணி நிலைமை, பதவி உயர்வு, காலிப் பணியிடங்கள் நிரப்புதல் உள்ளிட்ட எந்த பணிகளும் தமிழக அரசில் நடக்காத நிலை குறித்தும் ஆழ்ந்து விவாதித்து நமது போராட்ட வியூகம் அமைத்து தொடர்ந்து பல்வேறு போராட்டங்கள் நடத்தினோம். ஆனாலும் தமிழக அரசு கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை. அதனைத் தொடர்ந்து ஜாக்டோ-ஜியோ பேரமைப்பு உருவாக்கி கடந்த ஜனவரியில் 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 22.01.2019 முதல் நடைபெற்ற காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை நடத்தினோம்.

தமிழக அரசு குறைந்தபட்சம் சங்க தலைவர்களை அழைத்து பேசாதது மட்டுமல்லாமல் போராட்டத்தை துச்சமென நினைத்து காவல் துறையை வைத்து அடக்குமுறையை ஏவி பல்லாயிரக்கணக்கான ஊழியர்களை கைது செய்தது மட்டுமல்லாமல் பழிவாங்கும் நோக்கத்தோடு இருக்கின்ற பணியிடங்களை காலி பணியிடங்களாக அறிவித்து பணிக்கு திரும்பவில்லையென்றால் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனாலும் நமது ஊழியர்கள் விடாப்பிடி யாக தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர். அப்பொழுது தமிழக முதலமைச்சர் அவர்கள் பத்திரிகை செய்தியின் வாயிலாக பணிக்கு திரும்புங்கள் என்று வேண்டுகோளை விடுத்தார். அதனை ஏற்றுக்கொண்டு ஜாக்டோ-ஜியே கூட்டமைப்பு, எதிர்காலத்தில் நமது

கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலும், மாணவர் நலன் கருதியும், மக்கள் நலன் கருதியும் வேலைநிறுத்தப் போராட்டத்தினை தற்காலிக மாக முடித்துக் கொண்டு பணியில் சேர்ந்தோம்.

இன்றைக்கு இருக்கின்ற தமிழக அரசு ஆசிரியர், அரசு ஊழியர் மற்றும் மக்களுக்கும் விரோதமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்காலிக பணிநீக்கம், பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அரசாணை 56 இளைஞர்களுக்கு எதிராக போடப் பட்டது. இளைஞர்களின் எதிர்கால வேலை வாய்ப்பை பறிக்கின்ற அரசு ஆணை, அதேபோல் தற்போது 145 அரசு ஆணை, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் இனிமேல் கல்வி கற்க முடியாத சூழ்நிலையை உருவாகியுள்ளது. துவக்கப்பள்ளி தொடக்கப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளியுடன் இணைக்கும் அரசின் முடிவு ஏழை எளிய மக்களுக்கு கல்வி கற்பது என்பது எட்டாக் கனியாக மாறி விடும் சூழ்நிலையை ஏற்படுத்தி யுள்ளது. இந்நிலையில் மத்திய அரசு தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்தியுள்ளது.

அதிகார வர்க்கத்தின் அடக்குமுறையை எதிர்ப்பது ஒருபுறமிருந்தாலும் சுயமரியாதை யோடு வாழ மத்திய அரசும் மாநில அரசும் வழிவகை செய்ய வேண்டும்.

தமிழகத்தில் பெண் அரசு ஊழியருக்கு இழைக்கப்படும் பாலியல் கொடுமைகள் சொல்லி மாளாது. தமிழகம் பெண்களுக்கு பாதுகாப்பற்ற மாநிலமாக மாறியுள்ளது. பொள்ளாச்சியில் நடந்த நிகழ்வுகளைக் கண்டு இந்த நாடு வெட்கி தலைகுனிய வேண்டும். இதற்காக நமது சங்கம் இயக்கம் நடத்தினோம். இவ்வாறான நிகழ்வு களில் அரசியல் குறுக்கீடு அதிகம் உள்ளதால் நம் வேலையை சுதந்திரமாக செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. அரசு ஊழியர்கள் அரசியல்வாதி களாலும், அரசு அதிகாரிகளாலும் நிர்ப்பந்தத்தால் தற்கொலைக்கு முயலும் அரசு ஊழியர்களின் நிலை சொல்லி மாளாது.

இதோடு மட்டுமின்றி நமது நியாயமான கோரிக்கையான சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், கணினி இயக்குனர்கள், தொகுப் பூதியம் மற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் லட்சக்கணக்கான ஊழியர்கள் தொடர்ந்து குறைந்த சம்பளத்தில் வேலை வாங்கும் நிலை தொடர்கிறது.

காலி பணியிடங்களை நிரப்புதல், ஊதிய முரண்பாடுகளை களைதல், புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வருதல், மத்திய அரசுக்கு வழங்கியது போல் மாநில அரசு ஊழியர்களுக்கும் 1.1.2016 முதல் நிலுவை தொகையை வழங்கிட வேண்டும், புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அரசு ஏற்று நடத்த வேண்டும், தொகுப்பூதியம் மதிப்பூதியம் அவுட்சோர்சிங் தினக்கூலி ஒப்பந்த முறையை அடியோடு ரத்து செய்தல், வேலை நிறுத்த உரிமை சட்டப்பூர்வ உரிமையாக்குதல், அனைவருக்கும் உச்ச வரம்பின்றி போனஸ் வழங்க வேண்டும், மத்திய அரசுக்கு இணையாக அனைத்து படிகளும் வழங்குதல், போராட்டத்தில் ஈடுபட்டதற்காக தமிழக அரசு பழிவாங்கும் நோக்கத்தோடு நமது மாநில தலைவரின் தற்காலிக பணி நீக்கத்தை ரத்து செய்தல், அதேபோல் 5068-க்கும் மேற்பட்ட அரசு ஊழியர் ஆசிரியர்கள் மீது போடப்பட்ட 17 பி குற்றக் குறிப்பாணை, மாறுதல் உத்தரவுகள் ரத்து செய்திடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் எங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் உள்ளிட்ட நமது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழக அரசை வலியுறுத்தும் இயக்க நடவடிக்கைகளை 2019 செப்டம்பர் 27, 28, 29 ஆகிய தேதிகளில் தஞ்சாவூரில் நடைபெறும் நமது சங்கத்தின் 13வது மாநில மாநாட்டில் திட்டமிட வேண்டியுள்ளது.

எனவே அனைத்து பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் பங்கேற்று ஆக்கபூர்வமாக சிந்தித்து, மிகவும் கூர்மையாக விவாதித்து முடிவு எடுக்க வேண்டும்.

29ஆம் தேதி நடைபெறும் மாபெரும் பேரணி தமிழக வரலாற்றில் ஒரு திருப்புமுனை பேரணயாகவும், தடைகளை தகர்த்தெறியும் மாநாடாகவும் அமையட்டும். அதிக அளவில் பெண்கள் உள்ளிட்ட லட்சக் கணக்கான ஊழியர்களை அணிதிரட்டி தஞ்சைக்கு அழைத்து வந்து பேரணியை வெற்றியாக்குவோம்.

தோழர்களே!

முன்னெப்போதும் இல்லாத வகையில் ஆவே சத்தோடு ஆர்ப்பரிப்போம். வீறுகொண்டு எழுந்து வா தோழா 13-வது மாநில மாநாட்டிற்கு! ❖

# இன்னொரு மன்னராட்சிக்கு நாம் சபிக்கப்பட்டிருக்கிறோமா?

கடந்த ஐந்து ஆண்டுகளாக பாரதிய ஜனதா அரசு இந்தியாவை முடியாட்சியின்கீழ் கொண்டுவரும் போக்கில் செயல்பட்டுவருகிறது என்பதை நாம் அவ்வப்போது சொல்லி வருகிறோம். இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெற்றவுடன் அந்த மிதவேகம் இப்போது மிகவேகமாக ஆகியுள்ளது. கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் இயங்கி வரும் இந்தியாவின் சிறப்பை உடைத்தெறிய ஆரம்பித்திருக்கிறது. “ஒரே தேசம், ஒரே ரேஷன்”, “ஒரே தேசம், ஒரே மொழி” போன்ற முழக்கங்கள். இதன் முடிவு வாக்கியம் “ஒரே தேசம், ஒரே மன்னர்” என்பது இப்போது வெளிப்படையாகி வருகிறது. வேற்றுமையில் ஒற்றுமையை கண்ட இந்தியாவை இப்போது ஒற்றைத் தலைமையின் கீழ் கொண்டுவரும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அவற்றுக்கான சமீபத்திய ஆதாரங்கள் சிலவற்றை நாம் காண்போம்.

## நதி நீர் சிக்கலுக்கான ஆணைய திருத்த மசோதா 2019

கடந்த ஜூலை மாதத்தில் ஆளும் பாஜக அரசு பாராளுமன்றத்தில் ஒரு சட்டதிருத்த மசோதாவை தாக்கல் செய்திருக்கிறது. அதன் பெயர் மாநிலங்களுக்கு இடையேயான நதி நீர் சிக்கலுக்கான ஆணைய திருத்த மசோதா *2019* (The Inter State River Water Disputes (Amendment) Bill, 2019) என்பதாகும்.

இந்த ஆணையம் அமைக்கப்பட்டால் அது நடைமுறைப்படுத்தப்படும் நாளிலிருந்து அதற்கு முன்பாக அமைக்கப்பட்ட தீர்ப்பாயங்கள் அல்லது அதற்கு முன் அமைக்கப்பட்டு நடைமுறையிலுள்ள அனைத்து தீர்ப்பாயங்களும் உடனடியாக இந்த ஒற்றை ஆணையத்தோடு இணைக்கப்படும். ஏற்கனவே ஆணையம் அமைக்கப்பட்டு தீர்ப்பும் கொடுத்து முடிக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் முடிவில் ஏதேனும் ஒரு மாநிலம் மத்திய அரசிடம் மேல்முறையீடு செய்தால், இந்த ஆணையம் உடனடியாக அதனை மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும். அப்படி மேல்முறையீடுக்கு ஆணையம் எடுத்துக்கொண்டால் ஆணையம் அதன் மீதான விசாரணையை ஒரு வருடத்திற்குள் முடித்து விசாரணை அறிக்கையை மத்திய அரசிடம் கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்க தவறும் பட்சத்தில் மேலும் ஆறு மாத காலம் நீடிப்பு கொடுக்கப்படும். அப்படியும் கொடுக்கவில்லையெனில் இந்த ஆணையம் கலைக்கப்பட்டு, புதிய ஆணையம் அமைக்கப்படும். அது மறுபடியும் முதலிருந்து புதிய உறுப்பினர்களை கொண்டு விசாரணையை தொடங்கும். இந்த ஆணையம் அறிக்கை கொடுத்த பின் மத்திய அரசு அதன்மீது மூன்று வருடங்களுக்குள் முடிவு எடுக்க வேண்டும். முடியவில்லையென்றால் மேலும் இரண்டு ஆண்டுகள் முடிவு எடுக்க நீடிக்கப்படும். ஏற்கெனவே பல தலைமுறைகள் விசாரிக்கப்பட்டு இறுதியாக உச்ச நீதிமன்றம் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று உத்தரவிட்டு சிலபல குளறுபடிகளுடன் அமைக்கப்பட்டுள்ள காவிரி மேலாண்மை வாரியத்தின் கதி இதன் மூலம் மீண்டும் பல தலைமுறைகளுக்கான பிரச்சனையாக உருவெடுக்கும் என்பதில் சிறு ஐயமும் இல்லை. விசாரணை என்ற பெயரில் ஆணையம், காலம் கடத்த கடத்த அது தமிழக வவசாயிகளையும், விவசாயத்தையும், ஏன் தமிழகத்தையே பாதிப்பதாக அமையும்.



இந்த திருத்த மசோதா மாநிலங்களின் நதிநீர் உரிமைகளை முற்றிலும் பறிப்பதாக அமைந்துள்ளது. மாசோதாவில் மத்திய அரசிதழில் தீர்ப்பை வெளியிட்டபின் மாநில நதிகள் குறித்த விவரங்களை நீரின் அளவு விவசாய நிலங்களின் அளவு உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் மத்திய அரசு மட்டுமே சேகரித்து வைக்கமுடியும் என்றும், மாநில அரசுக்கு அந்த உரிமை கிடையாது என்றும், மத்திய



அரசு சேகரிக்கும் விவரங்களில் ஏதேனும் சந்தேகம் மாநில அரசுக்கு இருந்தால் அதனை மத்திய அரசிடம் மட்டுமே முறையிட வேண்டுமே ஒழிய மாநில அரசு கணக்கெடுப்பு பணியினை செய்யக்கூடாது என்றும், இந்த ஆணையத்தை நீடிக்கவும், வேறு காரணங் களுக்காக கலைக்கவும் கூடிய உரிமை மத்திய அரசுக்கு உண்டு என்றும் கூறப்பட்டுள்ளது. அதாவது மத்திய அரசின் நிலைப்பாட்டிற்கு எதிராக ஆணையம் நியாயப்படி செயல்பட்டால் அதன்கதி அதோகதிதான் என்பது இதன் பொருள். உரிமை பறிப்பு இதோடு முடியவில்லை. மத்திய அரசின் முடிவின் மீது நீதிமன்றங்கள் தலையிட முடியாது என்றும் விளக்கப்பட்டுள்ளது. அதாவது நியாயம் நீதி எல்லாம் எதுவும் கேட்கக்கூடாது. மத்திய அரசு எடுக்கிறதுதான் இறுதி முடிவு என்பதை ஆணித்தரமாக சொல்கிறது மசோதா. இது மத்திய அரசு தொடர்ந்து அதிகார மையமாக மாறுவதை மேலும் உறுதி செய்வதற்கும், மாநில அரசுகளை மத்திய அரசிடம் கையேந்தும் நிலையில் வைப்பதற்கும், 2018இல் மோடி கொண்டுவந்த அணை பாதுகாப்பு மசோதாவை நிறைவேற்று வதற்கும் வழிவகுக்கும். மத்தியில் ஆளும் பாஜக அரசு தொடர்ந்து இதுபோன்ற பல மசோதாக் களை நிறைவேற்றி வருகிறது.

இந்த நதிநீர் திருத்த மசோதா மட்டும் நிறைவேறினால் காவிரி நீர் தமிழகத்திற்கு ஒருநாளும் கிடைக்காது. கிடைக்கவும் விட மாட்டார்கள். அதுபோக மாநில அரசுகள் இனி தண்ணீருக்கு மத்திய அரசிடம் மண்டியிட்டு தான் நிற்கவேண்டும் என்ற நிலைமை உருவாகும். மாநிலங்களிலிருக்கிற நதிகளின் நிர்வாகம் மத்திய அரசுக்கு போகும். ஏற்கனவே வரி உரிமை, கல்வி உரிமை, உணவு உரிமை, லைசன்ஸ் பெறும் உரிமை என்று ஒவ்வொன்றாக மாநில அரசிட மிருந்து மத்திய அரசு பிடுங்கிகொண்டதன் தொடர்ச்சியே இது. இந்த நிலை ஒரே தேசம் ஒரே ராஜாங்கம் என்பதை உருவாக்கும் முயற்சியின் ஓர் அங்கமேயன்றி வேறில்லை.

## மோட்டார் வாகனச் சட்ட திருத்த மசோதா 2019

ஜூலை 15, 2019 அன்று பாராளுமன்றத்தில் “மோட்டார் வாகனச் சட்ட திருத்த மசோதா 2019" (The Motor Vehicle Amendment Bill 2019) தாக்கல் செய்யப்பட்டு ஜூலை 23, 2019 அன்று லோக்சபாவில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த மசோதா இரு அவையிலும் நிறைவேற்றப் பட்டு சட்டமாக வருமேயானால், இனி மாநில மற்றும் வட்டார போக்குவரத்து கழகங்களுக்கு வேலையில்லாமல் போகும்.

இப்படிப்பட்ட ஒரு மசோதா ராஜ்யசபாவில் நிறைவேறி சட்டமானால் மாநிலத்திலுள்ள வட்டார மற்றும் மாநகர போக்குவரத்து கழகங்கள் உள்ளிட்ட அனைத்தும் இழுத்து மூடிவிட்டு மாநில அரசுகள் மத்திய அரசிடம் கையேந்தி நிற்க வேண்டி வரும்.

## 44 தொழிலாளர் நலச்சட்டங்களை 4ஆக குறைக்கும் நடவடிக்கை

பல்வேறு தொழிற்பிரிவுகளைச் சேர்ந்த, வெவ்வேறு தொழிற்சங்கங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கடந்த ஆகஸ்ட் 2-ம் தேதியன்று தில்லி பாராளுமன்றத் தெருவில் போராட்டம் ஒன்றை நடத்தினர். பாரதிய ஜனதா அரசு தற்போது தொழிலாளர் நலன்களைக் குறித்து நடப்பில் இருக்கும் 44 சட்டங்களைக் கூட்டிக் கலந்து நான்கு சட்டங் களாக திருத்தியமைக்க உத்தேசித்திருப்பதை எதிர்த்தே இந்தப் போராட்டம் நடைபெற்றது. சம்பளம், பணியிடப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணியிட வேலைச் சூழல், சமூக பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் மேம்பாடு உள்ளிட்டவைகளை நேரடியாக பாதிக்கக்கூடிய தாக இந்த சட்ட திருத்தம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் பத்து தொழிற்சங்கங்கள் ஒருங்கிணைத்த இந்தப் போராட்டத்தில் சங்கப்பரிவார "தொழிற்சங்கமான" பாரதிய மஸ்தூர் சங்கம் கலந்து கொள்ளவில்லை. "சம்பளச் சட்டம் - 2019" ஏற்கனவே பாராளுமன்றத்தின் இரண்டு அவை களிலும் கடந்த மாதமே நிறைவேற்றப்பட்டு விட்டது. இந்நிலையில், பணிப் பாதுகாப்பு, சுகாதாரம், பணியிட வேலைச் சூழல் குறித்த சட்ட திருத்தம் கீழவையில் அறிமுகம் செய்யப்பட்டு விவாதத்திற்காக காத்துள்ளன.

குறைந்தபட்ச சம்பளம் உயர்த்தப்படுவது அல்லது மாற்றப்படுவதைப் பொறுத்தவரை ஐந்தாண்டுகளுக்கு மிகாமல் ஒரு முடிவெடுத்தால் போதுமானது என்கிறது புதிய சட்ட திருத்தம். இதில் உலகளவில் இந்தியத் தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே குறைந்தபட்ச சம்பளமாக உள்ளதை

மேலும் குறைத்துவிடும் என்பது குறிப்பிடத் தக்கது.

குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தை மீறினால் அபராதம் அல்லது சிறை தண்டனை என இருந்தது தற்போது மாற்றப்பட்டுள்ளது. மேலும், வேலை நேரத்தைப் பொறுத்தவரை புதிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு 1ஏ வேலை நேரத்தை நிர்ணயிக்கும் அதிகாரத்தை அரசுக்கு கொடுக்கிறது. அதே நேரம் பிரிவு 13 உட்பிரிவு 2 அந்த வேலை நேரத்தை நீட்டிக்கும் அதிகாரத்தை முதலாளிகளுக்கு வழங்குகின்றது. ஆக, சட்டப் பூர்வமாகவே 8 மணி நேர வேலை என்பதை நினைத்தமாத்திரத்தில் முதலாளிகளால் மீற முடியும்.

தொழிலாளர்கள் தில்லியில் நடத்திய போராட்டத்தை ஆதரித்து அறிக்கை வெளியிட் டுள்ளது சர்வதேச தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு "மிக அடிப்படையான சமூக நீதியையும், கவுரவமான வேலைக்கான கோரிக்கையையும் இந்திய பாரதிய ஜனதா அரசு துச்சமாக மதிப்பதை உலகம் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறது. “இது எமது இந்தியச் சகோதர சகோதரிகளின் போராட்டம் மட்டுமல்ல; எமது போராட்டமும்தான்" என அதன் பொதுச் செயலாளர் ஷரோன் பர்ரோ தெரிவித்துள்ளார். ஆக இந்த தொழிலாளர் நலச்சட்டங்களை 44லிருந்து 4ஆக குறைப்பதன் மூலம் தொழி லாளர்கள் கேட்கும் உரிமைகளில் 90 சதவீதத் திற்கும் மேலானவற்றை பிடுங்கி எறிந்துவிட நினைக்கிறது ஆளும் பாஜக அரசு.

## காஷ்மீர் போராட்டம் 1947ல் தொடங்கிய தல்ல... இன்றோடு முடியப்போவதும் அல்ல...

இந்த ஆண்டு ஆகஸ்ட் 5ம் தேதி பாஜக ஆளும் மத்திய அரசு காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து சட்டத்தை ரத்து செய்து அரசாணை பிறப்பித்து அதனை நிறைவேற்றவும் செய்தது. இந்த சிறப்பு அந்தஸ்து சட்டம் இந்தியாவுடன் இணைவதற்காக காஷ்மீருக்கு சில தன்னாட்சி சலுகைகளை வழங்குகிறது. அந்த அரசாணை நிறைவேறிய நாள் முதல் இந்தியா வரலாறு காணாத ஊரடங்கை அங்கே நிறைவேற்றி வருகிறது. தகவல் தொடர்புகள் அறுபட்டுள்ளன. பெரும்பாலான பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளது. காஷ்மீரின் முக்கிய அரசியல் தலைவர்கள் எல்லாருமே இல்லச்சிறையில் வைக்கப்பட்டுள் ளனர். ஆர்டிகள் 370 எனப்படும் இந்த சட்டப்பிரிவு இஸ்லாமியப் பெரும்பான்மை கொண்ட காஷ்மீர் மாநிலத்துக்கு வெளியுறவுத் துறை, ராணுவம், தகவல் தொடர்பு தவிர்த்த பிற விஷயங்களில் ஓரளவான தன்னாட்சியை அளிக்கிறது. அதனை ரத்து செய்தது கடந்த 70 ஆண்டு கால காஷ்மீர் வரலாற்றில் ஆகப்பெரிய அரசியல் முடிவு.

ஏகாதிபத்திய சக்திகளின் அடக்குமுறைகளை யெல்லாம் தாண்டி சுய நிர்ணயத்துக்காக காஷ்மீர் நூற்றாண்டுகளாக போராடி வருகிறது. இன்று இந்திய ஏகாதிபத்தியம் தேசியவாதம் பேசிக் கொண்டே பள்ளத்தாக்கை கட்டுப்படுத்த முயற்சிப்பது கொஞ்சம் நகைமுரண்தான். தொடர்ந்த ஏகாதிபத்திய துஷ்பிரயோகத்தின் அடுத்த நடவடிக்கை இது; கடைசியாக, கொஞ்சம் நெகட்டிவ்வாகப் பார்த்தால் ஆகஸ்ட் 5, 2019 என்ற தேதி காஷ்மீரில் நீண்ட நெடுங் காலமாக தொடர்ந்த ஆதிக்கவாத அடக்கு முறையின் இன்னொரு அத்தியாயமாகவே நினைவில் கொள்ளப்படலாம். அல்லது, கொஞ்சம் பாசிட்டிவ் ஆகப்பார்த்தால், காஷ்மீரின் துயருற்ற மக்களின் மாண்பின் மேல் சமீபத்தில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் வரலாறு காணாத கிளர்ச்சி மற்றும் போராட்டத்துக்கு வித்திட்டு இறுதியில் காஷ்மீரின் சுதந்திரத்தில் முடியலாம்.

## இன்னொரு மன்னராட்சிக்கு சபிக்கப்பட்டவர்களா நாம்?

பல்வேறு திருத்த மசோதாக்கள், அவசரச் சட்டங்கள், விதிகள் மூலமாக மாநில அரசுகளுக்கு உள்ள அதிகாரத்தை மத்திய அரசு வேகவேகமாக விழுங்கி நானே ராஜா நானே மந்திரி என்ற ஆட்டத்தை தன்வயப்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறது. இந்தமுறை ஆட்சி ஏற்றபின் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட சில மசோதாக்கள், காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்து நீக்கம் போன்ற சில செயல்கள் சொல்லும் செய்தி, இப்படியே போனால் இந்தியாவில் முடியாட்சி வந்துவிடும் என்பது தான். உழைப்பாளி, விவசாய, கூலித் தொழி லாளி, சாமானிய மற்றும் நடுத்தர வர்க்க மக்களைப் பற்றியெல்லாம் கவலைகொள்ளாமல் தீட்டப்படும் சட்டங்களும் திட்டங்களும் இந்தியாவை புதிய பொருளாதாரப் பாதைக்கு அழைத்துச் செல்வதாக பிரதமரும் பிற

அமைச்சர்களும் பிதற்றிக் கொள்ளலாம். ஆனால் தொழிலாளர்கள் விவசாயிகள் நடுத்தர வர்க்க மக்களின் நலன்களை பின்னுக்குத் தள்ளிவிட்டு எந்த நாடும் பொருளாதார மேம்பாடு கண்டதாக வரலாறு இல்லை. விவசாயிகளுக்கும் தொழி லாளிகளுக்கும் வறுமையை பரிசாக அளித்து விட்டு கார்ப்பரேட்டுகளுக்கு பட்டுக்கம்பளம் விரிப்பதாலேயே இந்தியாவின் பொருளாதாரம் மேம்பாடு அடையாது என்பதை நிகழ்ந்து கொண் டிருக்கும் பொருளாதார சரிவுகள் படம்போட்டு காட்டுகின்றன. “என்னதான் நடக்கும் நடக்கட் டுமே” என்ற போக்கில் மன்னராட்சிக்கான கனவுகளுடன் நடத்தப்படும் சுயநல ராஜாங்கத் தின் ஆட்டங்களில் வெற்றி என்பது ஏழை மற்றும் தொழிலாள நடுத்தர வர்க்கத்தை கொன்று தீர்த்த பின்னர் அவர்களின் பிணங்களின் மீது நின்று மட்டுமே நடத்தக்கூடிய நாடகம் என்பது சரிந்து போன பல சாம்ராஜ்யங்கள் சொல்லும் சரித்திரம் ஆகும். அந்த வரலாறுகளை ஆழ்ந்து படித்து விட்டு ஒரே தேசம் ஒரே மன்னர் என்ற சித்தாந் தத்தை இவர்கள் மூடி வைப்பது நல்லது.

இவர்களின் நடவடிக்கைகள் நமக்கு எழுப்பும் கேள்வி இன்னொரு மன்னராட்சிக்கு சபிக்கப்பட் டிருக்கிறோமா நாம்? என்பதுதான். இது இரும்புக்கரங்களால் சாத்தியப்படும் என்றால், இன்னொரு விடுதலைக்கான சவால்களும் இப்போதிலிருந்தே நமக்கு காத்துக் கிடக்கின்றன. ❖

# தமிழ்நாடு அரசு மருத்துவர் சங்க மாநில/ மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

**உ**யிர் காக்கும் பணியை, தன் சொந்த நலன் மற்றும் குடும்ப நலன் துறந்து செய்து வரும் பெரும் மதிப்பிற்குரிய வாழும் தெய்வங்களாம் மருத்துவர்கள் அனைவருக்கும் தமிழ் மாநில உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சங்கம் சார்பில் சிரம் தாழ்ந்த வணக்கங்கள்!

05.08.2011-ல் மத்திய சட்டமாகிய "உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011"-ன்படி தமிழ்நாட்டில் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை ஏற்படுத்தப்பட்டது.

இந்த சட்டம் அமல்படுத்தப்பட்ட நாளில் ஏற்கனவே இருந்த "உணவு கலப்பட தடைச் சட்டம் 1954"-ன்படி உணவு ஆய்வாளராக பணிபுரிந்தவர்கள் உணவு பாதுகாப்பு அலுவலர்களாக பணி மாற்றம் செய்யப்பட்டனர்.

இப்போது உள்ள சட்ட விதிகளின்படி தமிழ்நாடு அரசின் உணவு பாதுகாப்புத்துறையில் உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு உள்ள ஒரே பதவி உயர்வு வாய்ப்பு என்பது மாவட்ட நியமன அலுவலர்கள் மட்டுமே. மேற்படி துறை ஆரம்பிக்கப்பட்டு எட்டு ஆண்டுகளுக்கும் மேலாகியும் அதற்கான பணிவிதி அரசால் உருவாக்கப்படவில்லை

30 ஆண்டுகளுக்கும் மேலாக அரசுப் பணியை ஒரே நிலையில் எந்தவித பதவி உயர்வும் பெறாமல் பணிபுரிந்து வருவதால் அரசு விதிப்படி சிறப்பு ஊதிய உயர்வை இன்றைக்கு உணவு பாதுகாப்பு அலுவலர்களாக பணிபுரிந்து வருபவர்களில் பலர் பெற்றுள்ளார்கள் என்ற நிலையில், அரசுப் பணியை மேற்கொள்பவர்கள் தம்முடைய பணிக்காலத்தில் குறைந்தபட்சம் நான்கு கட்ட பதவி உயர்வு பெற்றிட தகுதியுள்ளனர் என்று விதிகள் உள்ள நிலையில், உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கான ஒரே பதவி உயர்வு வாய்ப்பும் பறிக்கப்படும் சூழல் தற்போது இத்துறையில் நிகழ்ந்து வருகின்றது

தமிழகத்தில் உணவு பாதுகாப்புத்துறை ஆரம்பிக்கப்பட்ட 05.08.2011-ல் உடனடியாக தனித்துறையை கட்டமைக்க வேண்டிய அவசர, அவசிய சூழலில், சட்ட விதிகளின்படி நியமன அலுவலர் பதவிக்கான தகுதியினை பெற்றிருந்த உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கான பணி மூப்பு பட்டியல் துறையால் வெளியிடப்படாத நிலையில், பணிமூப்பின் அடிப்படையில்

கேரளம் உள்ளிட்ட மற்ற மாநிலங்களைப் போல் மூத்த உணவு பாதுகாப்பு அலுவலர்களை நியமன அலுவலர் பணியில் நியமிக்காமல், தற்காலிக ஏற்பாடாக அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகராட்சி, மாநகராட்சிகளில் மருத்துவ அலுவலர்களாக / உள்ளூர் நல அதிகாரம் பெற்றவர்களாக (LOCAL HEALTH AUTHORITY) பணியாற்றியவர்கள் மாவட்ட நியமன அலுவலர்களாக தற்காலிக மாற்றுப் பணியில் நியமிக்கப்பட்டனர். மாற்றுப் பணி என்பதால் மேற்படி நியமனங்களுக்கு எந்தவித நியமன முறையும் (பணி மூப்பு இட ஒதுக்கீடு, தகுதி உள்ளிட்டவை) பின்பற்றப்படவில்லை.

மேற்படி மாற்றுப் பணியில் பணிபுரியும் காலம் பலமுறை உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் நீட்டிப்பு வழங்கப்பட்டு அதுவும் கடந்த 05.08.2019 உடன் முடிவடைந்து விட்டது

மருத்துவர்கள் தம்மை மாவட்ட நியமன அலுவலர்களாக தொடர் அனுமதிக்க வேண்டும் என கர்நாடக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ததற்கு "மருத்துவர்கள் எந்த நோக்கத் திற்காக நியமிக்கப்பட்டனரோ அதைத்தான் நிறைவேற்ற வேண்டும். அனைவரையும் ஏற்கனவே பணியாற்றிய இடத்திற்கு மருத்துவ ராக பணியாற்ற திரும்ப அனுப்பப்பட வேண்டும்" என அரசுக்கு உத்தரவிட்டது. மருத்துவர்கள் மாவட்ட நியமன அலுவலராக பணியாற்ற அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்தது. கர்நாடக அரசு நீதிமன்ற தீர்ப்பினை செயல்படுத்தியது

சென்னை உயர்நீதிமன்றம் உணவு பாதுகாப்பு அலுவலர் கோரியபடி மாவட்ட நியமன அலுவலர் பணியிடத்தை தகுதியுள்ள அவர்க ளுக்கே வழங்க வேண்டும் என தீர்ப்பளித்துள்ளது. பல மாநிலங்களில் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் தகுதியுள்ளோர் மாவட்ட நியமன அலுவலர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிலையில் எந்தவித முறையான வகை யிலும் இல்லாமல் மாவட்ட நியமன அலுவலர் களாக மாற்றுப் பணியில் அமர்த்தப்பட்டவர்கள் ஏதேதோ காரணங்களுக்காக, ஏதேதோ வழிகளில் தம் இருப்பை தக்கவைக்க முயற்சித்து வருகின்றனர். அநேகமாக அதுவும் நடக்கலாம்.

இந்த இடத்தில் நான் ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனது மதிப்பிற்குரிய நண்பர், அப்போதும், இப்போதும் வட்டார மருத்துவ அலுவலர்களாக பணியில் உள்ளவர், தமிழ்நாடு அரசு மருத்துவர் சங்கத்தின் மாவட்ட நிர்வாகியாக உள்ளவர் சில ஆண்டுகளுக்கு முன்னர் அப்போது காலியாக இருந்த உணவு பாதுகாப்பு மாவட்ட நியமன அலுவலர் பணியிடத்திற்கு விண்ணப் பிக்கலாமா எனக்கேட்டார். "அதுக்கு நீங்க சரிப்பட்டு வரமாட்டீங்க" என்று கூறினேன். இருந்தும் விண்ணப்பித்தார். ஆனால் அவருக்கு மாவட்ட நியமன அலுவலர் பணியிடம் கிட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உதவி மருத்துவராக பணியில் சேரும் மருத்துவர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளி யில் உறுதி செய்யப்பட்ட பதவி உயர்வு இன்றும் (1) Assistant Surgeon, உதவி மருத்துவர், Pay level 22 (2) Senior Asst Surgeon, முதுநிலை உதவி மருத்துவர், Pay level 23, 8 years (3) Civil Surgeon, குடிமுறை மருத்துவர், Pay level 25, 15 years (4) Senior Civil Surgeon, முதுநிலை குடிமுறை மருத்துவர், Pay level 26, 17 years (5) Chief Civil Surgeon, முதன்மை குடிமுறை மருத்துவர், Pay level 28, 20 years) அமலில் உள்ளது.

மேலும் மருத்துவர்கள் பதவி உயர்வை பெறவேண்டும், மத்திய அரசுக்கு இணையான ஊதியம் பெறவேண்டும் என்ற விருப்பம் எமக்கும் உண்டு (எமது மாநில நிர்வாகிகள் உட்பட பல உணவு பாதுகாப்பு அலுவலர்களின் குழந்தைகளே அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவர் படிப்பு படித்து வருகின்றனர் என்பதும் பலர் அரசில் மருத்துவர்களாக பணிபுரிகின்றனர் என்ற அடைப்படையில் இதுவும் சுயநலம் சார்ந்தது எனவும் எடுத்துக் கொள்ளலாம்). அவை இல்லாமல் வட்டார, மாவட்ட, மாநில அளவிலான பதவி உயர்வும் மருத்துவர்கள் தம் உரிமைப்படி / பணி விதிகளின்படி பெறுகின்றனர்.

இப்படிப்பட்ட நிலையில் உணவு பாதுகாப்பு அலுவலர்களாக பணிபுரிபவர்களுக்கு இன்று உள்ள சட்ட விதிகளின்படி தகுதியுள்ள ஒரே ஒரு பதவி உயர்வு வாய்ப்பையும் ஆக்கிரமித்துக் கொண்டு அதனையே தக்கவைக்கவும் முயற்சிப் பது முறைதானா நியாயம்தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

- **ஏ.ட்டீ.அன்பழகன்**

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


நாள் : 4.8.2019

## மாநில பிரதிநிதித்துவப் பேரவை அறிவிப்பு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவை (13ஆம் மாநில மாநாடு) 2019 செப்டம்பர் மாதம் 27, 28 மற்றும் 29 தேதிகளில் ஜெயராம் மகால் (வெ.கோபால்சாமி அரங்கம்) தஞ்சாவூர் என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

பொருள்கள்

| | |
|---|---|
| 27.9.2019 | பொதுச் செயலாளர் அறிக்கை - வேலை அறிக்கை - நிதிநிலை அறிக்கை |
| 28.9.2019 | விவாதம் |
| 29.9.2019 | விவாதங்களுக்கு பதிலுரை, தீர்மானங்கள் மற்றும் 2019-2021ஆம் ஆண்டுகளுக்கான மாநில நிர்வாகிகள் தேர்தல் |

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுடன்

**(மு.அன்பரசு)**
பொதுச் செயலாளர்

பெறுநர் :

மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள்

நாள் : 4.8.2019

## மாநில நிர்வாகிகள் தேர்தல் அறிவிப்பு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் (13ஆம் மாநில மாநாடு) மாநில பிரதிநிதித்துவப் பேரவை 2019 செப்டம்பர் மாதம் 27, 28 மற்றும் 29 தேதிகளில் ஜெயராம் மகால் (வெ.கோபால்சாமி அரங்கம்) தஞ்சாவூர் என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

2019-2021ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கீழ்க்கண்ட மாநில நிர்வாகிகள் பதவிகளுக்கான தேர்தல் 29.9.2019 அன்று தஞ்சாவூரில் 13ஆம் மாநாட்டு அரங்கில் நடைபெறும்.

| **பதவியின் பெயர்** | **எண்ணிக்கை** |
|---|---|
| தலைவர் | 1 |
| துணைத் தலைவர்கள் | 6 |
| பொதுச் செயலாளர் | 1 |
| மாநிலச் செயலாளர்கள் | 6 |
| பொருளாளர் | 1 |

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்குப் போட்டியிட தகுதியுடையவர்கள் 2019ஆம் ஆண்டு சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும். மாநில நிர்வாகியாக போட்டியிடுபவருக்கு தேர்தல் நடைபெறும் நாளில் 2 ஆண்டுகளுக்கு குறையாமல் அரசுப் பணியில் இருக்கக்கூடிய வர்கள் மட்டுமே போட்டியிடலாம். ஒருவர் ஒரு பதவிக்கு மட்டுமே போட்டியிடலாம்.

**வாக்களிக்கத் தகுதியுடையவர்கள்**

தேர்வு செய்யப்பட்ட மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள்

போட்டி இருப்பின் மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் தேர்தல் ஆணையர் ஒருவரை நியமித்து தேர்தல் நடத்தப்படும்.

தோழமையுடன்

**(மு.அன்பரசு)**
பொதுச் செயலாளர்

# மீட்போம் இந்தியா

புதிய இந்தியா என கதைத்து
பழைய இந்தியா இழந்த கதை
பதிய வைக்குது மனதில் இதை
எனது இந்தியா அல்ல இது

நாடும் மொழியும் தேர்தலும் ஆட்சியும்
ஒன்றே என்றே ஓங்கி முழங்கி
தேடும் பன்முகம் தொலைத்துக் காணும்
புதிய இந்தியா வேண்டவே வேண்டாம்

நடந்ததைத் திரித்துச் சொல்லும் சரிதம்
இருப்பதும் களவு போகும் கல்வி
பிறந்த தேசியக் கல்விக் கொள்கை
காணும் இந்தியா வேண்டவே வேண்டாம்

உலகுக்கு உணவு படைக்கும் உழவர்
வாழ்வை மறிக்கும் திட்டங்கள் தீட்டும்
கலக இந்தியா வேண்டவே வேண்டாம்
பழைய இந்தியா வேண்டும் வேண்டும்

குரங்குகை மாலை என்றே பொதுத்துறை
அழித்திடும் அரசே ஆளும் இந்தியா
இறங்கட்டும் விரைவில் கிடைக்கட்டு மிங்கே
அமைதி பெறவே இனிய இந்தியா

உணவும் உடையும் வழக்கமும் பற்றும்
பண்டைப் பண்பாடு கேள்விக் குறியாகி
தினமும் குண்டர்கள் தாக்குதல் தொற்றும்
அவல இந்தியா வேண்டவே வேண்டாம்

ஆள்வோர் ஆணைகள் நச்சுக் கலைகள்
எளியோரைக் கொல்லும் ஏவு கணைகள்
மாள்வோர் தொடரா திருக்க வேண்டும்
கோரிக்கை கேட்பது பழைய இந்தியா

மெல்லக் குவிக்கும் அதிகாரம் யாவும்
பாசிச ஆட்சியின் காட்சியாய் மேவும்
மெல்லக் கொல்லும் நஞ்சென அறிந்தோம்
வேண்டாம் புதிய இந்தியா என்போம்

சனாதனம் ஓங்கி சனநாயகம் சாகும்
வேக வளர்ச்சியில் தேசம் நாசம்
கனாகாணும் நவீன இந்தியா இதுவன்று
வேண்டும் பழைய இந்தியா அதுவொன்றே

பேதம் பாராது கரங்கள் சேர்த்து
போராடிப் பெற்ற சுதந்திரம் போல
வேதம் எனவே வேற்றுமையில் ஒற்றுமை
முழங்கிப் போரிட்டு மீட்போம் இந்தியா

- ***பெரணமல்லூர் சேகரன்***

## படித்ததில் பிடித்தது



நான் பிறரிடத்தில்...

சாக்ரடீஸை படியுங்கள் என்றபோது நீங்கள் கிரேக்கனா என்று கேள்வி எழுப்பவில்லை.!

கார்ல் மார்க்ஸை படியுங்கள் என்றபோது நீங்கள் யூதனா என்று கேள்வி எழுப்பவில்லை.!

ஃப்ரெட்ரிக் ஏங்கல்ஸை படியுங்கள் என்றபோது நீங்கள் ஜெர்மானியனா என்று கேள்வி எழுப்பவில்லை.!

வ்ளாடிமிர் லெனினை படியுங்கள் என்றபோது நீங்கள் ரஷ்யனா என்று கேள்வி எழுப்பவில்லை.!

எர்னஸ்டோ சே குவேராவை படியுங்கள் என்றபோது நீங்கள் அர்ஜென்ட்டினியனா என்று கேள்வி எழுப்பவில்லை.!

ஜான் லாக்கை படியுங்கள் என்றபோது நீங்கள் சுதந்திரவாதியா என்று கேள்வி எழுப்பவில்லை.!

ஃபிடல் காஸ்ட்ரோவை படியுங்கள் என்றபோது நீங்கள் கியூபனா என்று கேள்வி எழுப்பவில்லை.!

நெல்சன் மண்டேலாவை படியுங்கள் என்றபோது நீங்கள் தென்ஆப்பிரிக்கனா என்று கேள்வி எழுப்பவில்லை.!

ஃப்ரெட்ரிக் டக்ளஸ், ஆபிரகாம் லிங்கனை படியுங்கள் என்றபோது நீங்கள் அமெரிக்கனா என்று கேள்வி எழுப்பவில்லை.!

மார்ட்டின் லூதர் கிங்கை படியுங்கள் என்றபோது நீங்கள் நீக்ரோவா என்று கேள்வி எழுப்பவில்லை.!

சார்லஸ் டி கோளலை படியுங்கள் என்றபோது நீங்கள் பிரெஞ்சுக்காரனா என்று கேள்வி எழுப்பவில்லை.!

வில்லியம் வாலஸை படியுங்கள் என்றபோது நீங்கள் ஸ்காடிஷ்ஸா என்று கேள்வி எழுப்பவில்லை.!

மாவோ சேதுங்கை படியுங்கள் என்றபோது நீங்கள் சீனனா என்று கேள்வி எழுப்பவில்லை.!

ஆனால்,

தன் வாழ்நாளில் 46 லட்சம் புத்தகங்களை வாசித்த, உலகின் மிகப்பெரிய வடிவிலான அரசியலமைப்பு சட்டத்தை வடிவமைத்த,

15000 பக்கங்களை எழுதி 55க்கும் மேற்பட்ட புத்தகங்களாக வெளியிட்ட,

சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் பகுத்தறிவு பொதுவுடைமையை போதித்த,

காலனி ஆதிக்கத்தை எதிர்த்து இந்தியாவிற்காக போராடிய,

சாதிமத ஆதிக்க ஒடுக்குமுறையை எதிர்த்து இந்தியாவில் போராடிய,

இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் '

'பாரத ரத்னா' "பாபாசாஹேப்

டாக்டர் அம்பேத்கர் (M.A., Ph.D., M.Sc., D.Sc., Barrister-at-Law, L.L.D., D.Litt)" அவர்களை படியுங்கள் என்றால் மட்டும்,

"ஏன் நீங்கள் தலித்தா" என்ற மூர்க்கத்தனமான கேள்வி எழுகிறது.!?

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தூத்துக்குடி மாவட்டக்குழு அலுவலகம் புத்தம் புதிய பொலிவுடன் திறப்பு விழா



**தோ**ழர் எம்.ஆர். அப்பன் இல்லம் மற்றும் தோழர் டி.கே.சுந்தரபாண்டியன் அரங்கம் திறப்புவிழா 10.08.2019 அன்று நடைபெற்றது. முன்னதாக சம்மேளனக் கொடியினை சம்மேளன செயலாளர் மொ.ஞானதம்பியும், சங்கக் கொடியினை மாநில பொருளாளர் எம்.தங்கராஜ் ஏற்றி வைத்தனர். எம்.ஆர்.அப்பன் இல்லத்தை முன்னாள் பொதுச் செயலாளர் கே.ஆர்.சங்கரன் திறந்து வைத்தார். டி.கே.சுந்தரபாண்டியன் அரங்கத்தை மாநிலத் தலைவர் (பொறுப்பு) ஆ.செல்வம் திறந்து வைத்தார்.

மாவட்ட அலுவலகத்தை பொதுச் செயலாளர் மு.அன்பரசு திறந்து வைத்தார். 4 அலுவலக அறைகளை ந.குமாரவேல், சு.பார்த்திபன், சி.ஆர்.இராஜகுமார், தி.கலைசெல்வி ஆகியோர் திறந்து வைத்தனர்.

## திறப்பு விழா கூட்டம்

திறப்பு விழா கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் ஞா.கலைஅரசன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் என்.வெங்கடேசன் சங்கக் கட்டிட வரலாற்றை நினைவுகூர்ந்து வரவேற்புரை ஆற்றினார். மாநிலம் முழுவதுமிருந்து மாநில, மாவட்ட நிர்வாகிகள் 1984 முதல் மாவட்ட, மாநில பொறுப்புகளில் இருந்த தலைவர்கள், உறுப்பினர்கள், தோழமைச் சங்கத்தை சார்ந்த தலைவர்கள் வருகை தந்து வாழ்த்துரை வழங்கினார்கள்.

கட்டட மீட்பு போராட்டத்தில் சிறை சென்ற தோழர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரும் வந்து சிறப்பித்தார்கள். சுமார் 800 பேர் பங்கேற்று விழா சிறப்பாக நடைபெற்றது. கட்ட திறப்பு விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் மாவட்டத் துணைத் தலைவர் ம.சுப்பிரமணியன் நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது.

## கட்டடம்-ஒரு வரலாற்று பதிவு

சிறுக சிறுக சேர்த்த உழைப்புக்கள் சிறுக சிறுக காட்டிய போர்க்குணங்கள் சிறுக சிறுக விதைத்த தியாகங்கள் இவையனைத்தும் ஒரு கட்டடமாக உருப்பெற்றுள்ளது. அது தான் தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்! தோழர் டி.கே.சுந்தரபாண்டியன் அரங்கம்!!

## முன்னோட்டம்

**'மனதில் உறுதி வேண்டும் வாக்கினில் இனிமை வேண்டும் நினைவு நல்லது வேண்டும் நெருங்கின பொருள் கைப்பட வேண்டும் கனவு மெய்ப்பட வேண்டும் கைவசமாவது விரைவில் வேண்டும்'**

- **மகாகவி பாரதியார்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 06.05.1984 அன்று, மதுரையில் ஆரம்பிக்கப்பட்ட அடுத்த நாள், 07.05.1984 அன்று தூத்துக்குடியில் வட்டத் தலைவர் செ.கருணாகரன் தலைமையில் வட்டச் செயலாளர் டி.கே.சுந்தரபாண்டியன் மற்றும் மாவட்ட துணைத் தலைவர் நா.முனியாண்டிசாமி ஆகியோர் கலந்துகொண்டு பொதுக்குழு கூட்டப்பட்டு அதில் என்ஜிஓ சங்கம் கலைக்கப் பட்டு, அது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தூத்துக்குடி வட்ட கிளையாக மாற்றப்பட்டு அதிலிருந்து தொடர்ந்து தூத்துக்குடியில் உள்ள சங்க கட்டடம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கப் பொறுப்பில் இருந்தது.

09.05.1984-அன்று திருவைகுண்டம் வட்ட என்ஜிஓ சங்க வட்டத் தலைவர் பாண்டியன்

மற்றும் வட்டச் செயலாளர் செ.தங்கராஜ் ஆகியோரால் பொதுக்குழு கூட்டப்பட்டு என்ஜிஓ சங்கம் கலைக்கப்பட்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க திருவைகுண்டம் வட்டக் கிளையாக மாற்றப்பட்டு திருவைகுண்டத்தில் உள்ள சங்கக் கட்டடம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கப் பெறுப்பில் இருந்து வருகிறது.

## நீதித்துறை போராட்டம்

சிவ.இளங்கோ திருநெல்வேலி விடுப்பு சிவில் கோர்ட்டில் தூத்துக்குடியில் உள்ள கட்டடம் தங்களுடைய சங்கத்தைச் சேர்ந்தது எனவும் அரசு ஊழியர் சங்கத்தைச் சேர்ந்தவர்களை அந்த கட்டடத்திற்குள் நுழைய தடை ஆணை கேட்டு வழக்குத் தொடுத்தார்.

நீதிபதி, வழக்கு சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் விசாரித்துவிட்டு சிவில் வழக்கு முடியும் வரை தற்போது கட்டடம் யார் வசம் உள்ளதோ அவருடைய பொறுப்பிலேயே தொடர்ந்து இருக்க வேண்டுமென உத்தரவு பிறப்பித்தார். அதைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொறுப்பிலேயே அக் கட்டடம் இருந்து வந்தது.

## எதிரிக் கூட்டத்தினரின் சதிச்செயல்கள்

சிவ.இளங்கோ சங்கத்தினர் வேண்டுமென்றே திட்டமிட்டு தூத்துக்குடி தென்பாகம் போலீஸ் இன்ஸ்பெக்டர் உதவியுடன் சமூக விரோதிகளின் துணையுடன் கைகளில் பயங்கர ஆயுதங்களுடன் 07.06.1985 அன்று இரவு 12 மணியளவில் தூத்துக்குடி அரசு ஊழியர் சங்க கட்டடத்திற்குள் அத்துமீறி நுழைந்து இரவுக் காவலரை கட்டி வைத்து அறைகளின் பூட்டுக்களை உடைத்து அங்கிருந்த சங்க ஆவணங்களை தீயிட்டு கொளுத்தினார்கள்.

இச்சம்பவத்தைப் பற்றி கேள்விப்பட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் தூத்துக்குடி வட்டச் செயலாளர் டி.கே.சுந்தர பாண்டியன், இரா.பாலசுப்பிரமணியன் ஆகியோர் அன்று இரவே 2 மணியளவில் தென்பாகம் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தனர். ஆனால் சிவ.இளங்கோ சங்கத்தின ருக்கும், சமூக விரோதிகளுக்கும் துணை நின்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் பசுபதி அந்தப் புகார் மனுவின் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை.

நீண்ட வற்புறுத்தலின் பேரில் ஒரு காவலரை மட்டும் இரா.பாலசுப்பிரமணியன் அவர்களுடன் அனுப்பி வைத்தனர். சங்க கட்டடத்திற்குள் அரசு அலுவலர் ஒன்றியத்தைச் சேர்ந்த இருவர் இருந் தார்கள். சங்க காவலர் கட்டி வைக்கப்பட் டிருந்தார். சங்க காவலரின் கட்டுகளை இரா.பால சுப்பிரமணியன் அவிழ்த்து அவரை அனுப்பி வைத்தார். போலீஸ் எதுவும் நடவடிக்கை எடுக்க முடியாது என்று சென்று விட்டார்கள்.

எம்.ஆர்.அப்பன், கே.ஆ.சங்கரன் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் கே.ஆர்.சங்கரன் தூத்துக்குடி வந்து அரசு ஊழியர் சங்க நிர்வாகி கள், சிஐடியு தோழர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோருடம் ஆலோசித்து கட்டடத்தை கைப்பற்றுவது என முடிவு செய்யப்பட்டது.

17.06.1985 அன்று தோழர்கள் என்.சங்கரன் (ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்டத் தலைவர்), எஸ்.ஆறுமுகம் (மாவட்டச் செய லாளர்), டிகே சுந்தரபாண்டியன் (வட்டச் செயலாளர்), இரா.பாலசுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் பி.மீனாட்சிசுந்தரம் (வட்டப் பொருளாளர்), வி.ரவீந்திரன் (வட்ட இணைச் செயலாளர்), எஸ்.வேலுச்சாமி (கால்நடைத் துறை), பூ.கோபாலன் (நெடுஞ்சாலைத்துறை), முத்துமாலை (மருத்துவத்துறை), ராஜீ (மருத்துவத்துறை) ஆர்.நடராஜன் (வணிகவரித் துறை), வெங்கட்ராமன் (கால்நடைத்துறை), பி.அல்போன்ஸ் லிகோரி (ஓட்டப்பிடாரம் வட்டப் பொருளாளர்), இல.இராமமூர்த்தி (ஓட்டப்பிடாரம் வட்ட செயலாளர்), எம்.ஹாஜா மொஹைதீன் (நில அளவைத்துறை), செல்வராஜ் (அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி), ம.சுப்பிர மணியன் (தற்போது காமராஜ் கல்லூரி) ஆகிய தோழர்கள் உட்பட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னணி ஊழியர்கள் கட்டடத்துக்குள் செல்வதென்றும்,

“***கழுத்தில் விழுவது அரிவாளாக இருந் தாலும்***

***மாலையாக இருந்தாலும் -எத்தகையத் தாக்குதல் வந்தாலும் அவற்றை எதிர் கொண்டு***

***கட்டடம் மீட்கப்பட வேண்டும் என்ற ஒரு குறிக்கோளுடன் சென்றனர்***”.

கட்டடத்துக்குள் என்ஜிஓ சங்கத்தை சேர்ந்த இருவரும், சமூக விரோதிகளும் இருந்தனர்.

கட்டடம் கைப்பற்றப்பட்டது. ஆயுதங்களுடன் நம் தோழர்கள் மீது தாக்குதல் நடத்தவும் முற்பட்டனர். எல்லாவற்றையும் நமது தோழர்கள் முறியடித்தார்கள்.

நமது தோழர்கள் மீது தாக்குதல் நடத்த முற்பட்டவர்கள் மீது போலீஸ் நிலையத்தில் புகார் கொடுக்கச் சென்றபொழுது பசுபதி என்கிற போலிஸ் இன்ஸ்பெக்டர் அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் என்.சங்கரன் மற்றும் தூத்துக்குடி கிளை பொருளாளர் மீனாட்சி சுந்தரம் ஆகியோரை கைது செய்தார்.

- மேலும் சங்கக் கட்டடத்தில் கூட்டம் நடத்திக் கொண்டிருந்த வட்ட செயலாளர் டி.கே.சுந்தரபாண்டியன், வட்ட இணைச் செயலாளர் ரவீந்திரன் மற்றும் தோழமைச் சங்கமான சிஐடியுவின் ஊழியர்கள் எட்டு பேரையும் கைது செய்து கொலை முயற்சி வழக்கு தொடுத்தார்.
- மாவட்டச் செயலாளர் எஸ்.ஆறுமுகம் கைது செய்யப்பட்டார்.
- பசுபதி என்கிற போலீஸ் இன்ஸ்பெக்டர் அத்தோடு மட்டும் நிற்காமல், சிஐடியு ஊழியர்களை தன்னுடைய பூட்ஸ் கால்களால் கடுமையாக தாக்கியுள்ளார். அரசு ஊழியர் சங்கத்தினர் கடுமையான முறையில் ஆட்சேபணை செய்த பின்னர்தான் அதை அவர் நிறுத்தினார்.

## தியாகிகளுக்கு ஆதரவு - அலைகடல் என வந்தனர்

- கைது செய்யப்பட்ட அனைவரும் தூத்துக்குடி கிளைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். சிறையிலிருந்தவர்களை ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தோழமைச் சங்கத்தினரும் தினமும் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர். அதைக்கண்டு பொறுத்துக்கொள்ள முடியாத காவல் துறையினர் அவர்களை பாளையங்கோட்டை மத்திய சிறைச் சாலைக்கு மாற்றிவிட்டனர்.
- பின்னர் அனைவரும் ஜாமீனில் வெளியே வந்து தொடர்ந்து வழக்குகளை சந்தித்தனர். இவ்வழக்கினை நடத்தவும் கட்டடத்தை மீட்கவும் நடைபெற்ற நடவடிக்கைகளில் அன்றைய மாநிலத் துணைத் தலைவர் கே.ஆர்.சங்கரன் ஆற்றிய அரும்பணி போற்றுதலுக்குரியது.
- வழக்கு நடந்த காலம் முழுவதும் வழக்கு சந்தித்த தோழர்களின் குடும்பத்துக்கு ஊழியர்களிடம் நிதி வசூல் செய்து மாதா மாதம் வழங்கப்பட்டது.

## எச்சிறைக்கும் அஞ்சிடோம்

*03.07.1985* அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற மாபெரும் கண்டனப் பேரணியில் கலந்துகொண்டு எம்.ஆர்.அப்பன் ஆற்றிய எழுச்சி உரை அனைவரையும் தட்டி எழுப்பக் கூடியதாகவும் நியாயத்திற்காகப் போராடுகின்ற பொழுது எப்படிப்பட்ட இடையூறுகளும், இன்னல்களும் வந்தாலும் அவைகளைத் தகர்த்தெறிந்துவிட்டு முன்னேற வேண்டுமென்கிற துணிச்சலையும் தைரியத்தையும் அனைவருக்கும் ஊட்டக் கூடியதாக இருந்தது.

மேலும் அவர் அந்தப் பிரச்சினையினால் பாதிப்புக்குள்ளானவர்களை பாதுகாக்கவும் அவர்களை வழக்குகளிலிருந்து மீட்கவும் அந்தத் தூத்துக்குடி மாவட்ட கட்டடத்தை பாதுகாக்கவும் தொடர்ந்து கவனம் செலுத்தி வழி காட்டினார்.

## தீர்ப்பு


*28.04.1986* தீர்ப்பு வரும் நாளில் அரசு ஊழியர்கள் நீதிமன்ற வளாகத்தில் பெருங்கூட்டமாய்த் திரண்டிருந்தார்கள். நீதிமன்றத்துக்கு வந்த நீதிபதி ஏன் இவ்வளவு கூட்டம்? எனக் கேட்டார். அரசு ஊழியர் சங்க கட்டட வழக்கு தீர்ப்புக்காக என நீதிமன்ற ஊழியர்கள் கூறினார்கள்.

## தீர்ப்பு வழங்கும் நேரம்

“அனைவரும் விடுதலை” என இரண்டு வார்த்தைகளால் தீர்ப்பு வழங்கினார்.

தோழர் கே.ஆர்.சங்கரன் திரண்டிருந்த அனைத்து ஊழியர்களையும் அணிவகுக்கச் செய்து ராணுவ மிடுக்கோடு அரசு ஊழியர் அணிவகுப்பை கம்பீரமாக வழிநடத்தி வந்தார். கட்டடம் முன்பு வந்ததும் ‘Open the Door’ என உத்தரவிட்டதும் ஏற்கனவே தயாராகி இருந்த தோழர் பி.அல்போன்ஸ் லிகோரி தலைமையிலான குழு பூட்டை உடைத்தெறிந்தனர்.

தோழர் கே.ஆர்.எஸ். அவர்களின் இன்குலாப் ஜிந்தாபாத் என விண்ணைத்தொடும்



பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,
ஆணையர்
வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை

திரு.வி.க.தொழிற்பேட்டை,
ஆலந்தூர் ரோடு,
கிண்டி, சென்னை – 600 032.

நாள் : 15.08.2019

வாழ்த்து செய்தி

வணக்கம். தூத்துக்குடி மாநகரில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் சங்க வளாகத்தில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு உள்ளதை அறிந்தேன். சங்கத்தின் ஸ்தாபக பொதுச் செயலாளரும் ஆசானுமான தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம் எனப் பெயரிடப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் டி.கே. சுந்தரபாண்டியன் அரங்கம் ஆகியவற்றின் திறப்பு விழாவிற்கு அழைப்பு கிடைத்தது கண்டு மகிழ்ந்தேன்.

சங்கத்தின் பணிகள் மென்மேலும் சிறக்க எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துகளுடன்,

(பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.)
ஆணையர்

பெறுநர்
திரு. என். வெங்கடேசன்,
மாவட்ட செயலாளர்,
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்,
629 (221-A), பாளையங்கோட்டை ரோடு,
தூத்துக்குடி – 628 003.

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் பா.ஜோதி நிர்மலா இ.ஆ.ப. அனுப்பிய வாழ்த்துச் செய்தி

முழக்கத்துடன் நமது சங்க முன்னோடிகள் கட்டடத்துக்குள் நுழைந்தனர்.

## போராட்டம் உணர்த்தும் பாடங்கள்

- சாதி, சமய பேதமின்றி அனைத்து தரப்பு அரசு ஊழியர்களையும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டட மீட்பு என்ற ஒரே குடையின்கீழ் ஒன்றுபடுத்தியது.
- போராட்டம் இன்றி கோரிக்கைகள் வெற்றி பெறாது என்ற போர்க்குணத்தை அரசு ஊழியர் சங்கத்தினருக்கு கற்றுக்கொடுத்தது.
- வேலையே போனாலும் ஏன் உயிரே போனாலும் கட்டடத்தை மீட்டே தீருவோம் என உறுதி

## இறுதி வடிவம்

தூத்துக்குடி மாவட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வளாகத்தில் தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம் மற்றும் தோழர் டி.கே.சுந்தரபாண்டியன் அரங்கம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவை தியாகங்கள் மற்றும் போராட்டங்களின் வெளிப்பாடாகவும் வரலாற்று திருப்பமாகவும் உருவாகியுள்ளது என்றால் அது மிகையாகாது.

10.08.2019 அன்று தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம் முன்னாள் பொதுச் செயலாளர் கே.ஆர்.சங்கரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் தோழர் டி.கே.சுந்தரபாண்டியன் அரங்கம் மாநிலத் தலைவர் (பொறுப்பு) ஆ.செல்வம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மாவட்ட அலுவலகம் பொது செயலாளர் மு.அன்பரசு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேலும் அலுவலகங்கள் மாநில துணைத் தலைவர் ந.குமாரவேல், மாநில செயலாளர் சி.ஆர்.இராஜகுமார், மாநில துணைத் தலைவர் எஸ்.பார்த்திபன் மற்றும் மாநில செயலாளர் தி.கலைசெல்வி ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

## நிறைவாக

***தூங்கும் புலியைப் பறைகொண்டெழுப்பினோம்!***

***தூய தமிழரைத் தமிழ்கொண்டெழுப்பினோம்!!***

***தீங்குறு பகைவரை இவணின்று நீக்குவோம்!!!***

***செந்தமிழ் உணர்ச்சி வேல்கொண்டு தாக்குவோம்!!!!***

- ***புரட்சிக்கவி பாரதிதாசன்***

தூத்துக்குடி மாவட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டடத்தை பாதுகாக்க தூத்துக்குடி மாவட்ட அரசு ஊழியர் சங்கத்தினரும் அவர்களுக்கு உதவிய தோழமைச் சங்கத்தினரும் பட்ட கஷ்டங்களும் செய்த தியாகங்களும் மகத்தானவை. அவை காலா காலத்திற்கும் நெஞ்சில் நிறைந்து நிற்கும்.

புரட்சி உருவாக போராடுவோம்! எங்கள் தலைமுறை காக்க போராடுவோம்!! எங்கள் சங்கம் இருக்கும் வரை போராடுவோம்!!! எங்கள் இறுதி மூச்சுவரை போராடுவோம்!!!!

- **லூ.ஜோ சில்வஸ்டர்**, தூத்துக்குடி.

# இந்த பந்தம் உன்னதமானது!

அன்பிற்கினிய தோழர்களே! வணக்கம்.

நம்மில் சிலர் லட்சியத்திலிருந்து பார்வையை விலக்கி விட்டார்களோ என்கிற எண்ணம்தான் இப்போது ஏற்பட்டிருக்கிறது. கடந்த சில நாட்களாக திட்டமிட்டு நடத்தப்பட்டு வரும் பொய்ப் பிரச்சாரங்கள் நமது சங்கத்தின் பொது நலன் சார்ந்த கொள்கை கோட்பாடுகளை குழிதோண்டி புதைத்துவிட்டு, புதைந்த இடம் தெரியாத அளவுக்கு சுயநலக்கூடாராங்கள் எழும்புவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கொண்டிருக்கிறது. வருகின்ற விமர்சனங்கள் ஆரோக்கியமானவையோ அல்லது அரசு ஊழியர் சங்கத்தை செம்மைபடுத்தக் கூடியவையோ என்றால் அவை பொய்ப்பிரச்சாரங்களே ஆனாலும் மூன்றாம்தர விமர்சனங்களாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளலாம்.

எது கவனிப்புக்குரியவை? எவ்வளவு பலமான அமைப்பையும் எப்படி தடுமாறி விழ வைக்கலாம் என கங்கணம் கட்டிக் கொண்டு வைக்கப்படும் விமர்சனங்கள், ஒரு செயலை செய்தவர் எப்படி அதைச் செய்யலாம் என்றும் அவர் அதை இப்படிச் செய்திருக்கக்கூடாது என்றும் சுட்டிக் காட்டுபவர்கள், எங்கே தட்டினால் எங்கே விழுவார்கள் என கணக்கு பண்ணும் விமர்சகர்கள் - எவரும் இந்த இயக்கத்தின் கவனத்துக்குரியவர்கள் அல்லர், அவர்களின் விமர்சனங்களும் கவனிப்புக்குரியவை அல்ல.

ஆனால், யார் உண்மையில் களத்தில் இருக்கிறார்களோ, யார் முகத்தில் தூசியும், வியர்வையும் ரத்தமும் அப்பியிருக்கிறதோ, யார் தைரியமாக முயன்று தோல்வியின் விளிம்புகளிலிருந்து இயக்கத்தை மீட்கப் போராடுகிறார்களோ? யார் வெற்றி தோல்வி கோட்பாடுகளுக்கு அஞ்சாமல் மீண்டும் மீண்டும் தோல்வியே சாத்தியம் என்கிற நிலையிலும் ஊழியர் நலன் என்ற சத்தியத்தின் வாளை ஏந்தி, எதிர்வருகின்ற அத்தனை போர்களிலும் முன் நிற்கிறார்களோ, யார் உயர்ந்த அர்ப்பணிப்பை அளித்திருக்கிறார்களோ அவர்களே கவனத்திற்குரியவர்கள். அவர்களே போற்றுதலுக்குரியவர்கள். இத்தகைய போற்றுதலுக்கும் கவனிப்புக்கும் உரிய உயரிய தலைவர் தோழர் மு.சுப்பிரமணியன்.

தேர்தல் வியூகங்களுக்காக, தேர்தல் ராஜதந்திரத்திற்காக நமது இயக்கத் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியன் அவர்கள் மீது சிலர் சேற்றை வாரி இரைக்கிறார்கள். நெஞ்சம் பதைபதைக்கிறது. அவரை ஏளனம் செய்து எள்ளி நகையாடுபவர்களின் நோக்கம் இதுதான் என்றால் அவர்கள் விரித்த வலையில் தோழர் மு.சுப்பிரமணியனின் தாய் இயக்கம் விழுந்துவிட எதிரணியின்ர் வியூகம் வகுப்பதும் அதன் மூலம் தலைமை இயக்கத்தை வீழ்த்திடத் துடிப்பதும் மூன்றாம்தர அரசியல்.

அடுத்த முறை ஆட்சிக்கு வருவோமா என்பதில் நம்பிக்கையற்றுப்போன ஒரு அரசாங்கம், அதிகார வர்க்கத்தின் தவறான வழிகாட்டுதல்களுக்கு ஆட்பட்டு மேற்கொண்ட ஜனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் தோழர் மு.சுப்பிரமணியன் அவர்களின் பணி ஓய்வை நிறுத்தி வைத்த செயலும் ஒன்று. அரசுத் துறையில் பணி புரியும் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பாதுகாவலனாய் மட்டுமல்ல சமரசமில்லாப் போராட்டங்களை நடத்தி சிறை செல்ல தயங்காத தமிழ்நாடு அரசுஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியன் அவர்களின் மீதான அரசாங்க நடவடிக்கையின் ராஜதந்திரம், அரசு ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகள் அடுத்த கட்ட போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லவிடாமல் தடுப்பதாகும். அதை நாம் மூர்க்கதனமாக எதிர்த்து நின்று அரசுக்கு தக்க பதிலடி கொடுத்து வருகிறோம்.

ஆனால் அதே ராஜதந்திரத்தை பயன்படுத்தி எதிரணியாக செயல்பட்டு வரும் சிலர் தலைவர் தோழர் மு.சுப்பிமணியன் அவர்களை இழிவு படுத்தும் வகையில் பதிவிட்டு வருவதும் நமது இயக்கத்தை கொச்சைபடுத்தி இயக்கத்திற்குள் பிரிவினை ஏற்படுத்திட துடிப்பதும் இந்தக் கீழமைத்தனமான தூண்டுதலுக்கு இரையாகி எதிரணியினரின் சதி வலைக்குள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முதல் இயக்கமும், முக்கிய சங்கமுமான தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தினை இழுத்துவிட முயற்சிப்பதும் நமது சங்கத்தை பலவீனப்படுத்தும் செயலாகும். தோழர் மு.சுப்பிரமணியன் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் முத்து மட்டுமல்ல. அவர் அரசு ஊழியர் சங்கத்தின் சொத்துமாவார். இரண்டு இயக்கங்களுக்காகவும் அவர் செய்துள்ள அளப்பரிய தியாகங்கள் ஒவ்வொரு அரசு ஊழியரும் அறியவேண்டிய வரலாறாகும். அத்தகையதொரு தலைவரை அரசு

ஊழியர் சங்கம் காக்கத் தவறிவிட்டது என்றும், கண்டுகொள்ளவில்லை என்றும், ஊரக வளர்ச் சித்துறை அலுவலர்கள் சங்கமே உரைப்பது தன் கையே தன் கண்ணைக் குத்தும் செயலாகும்.

தோழர் மு. சுப்பிரமணியனின் கம்பீரத்தையும், போர்க்குணத்தையும் அரசு ஊழியர் சங்கம் என்றுமே, உயர்வான இடத்தில்தான் வைத்திருக் கிறது. இனியும் வைத்திருக்கும். அவர் எப்படிப் பட்டவர் என்பதை அவரின் பணி ஓய்வு பெற விடாமல் தடுக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தி வந்தவுடன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வெளி யிட்ட பத்திரிகைச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதை இங்கே நினைவு கூறுவது ஏற்புடையதாக இருக்கும்.

“அரசு ஊழியர் சங்கத்தின் தலைவரும், அரசு ஊழியர் மாத இதழின் ஆசிரியருமான தோழர் மு.சுப்பிரணியன் 1988ல் நடந்த அரசு ஊழியர் ஆசிரியர் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றுவிட்டு வந்தவர் என்பதும், அரசு ஊழியர் கள் உரிமைக்காக பலமுறை சிறை சென்றவர் என்பதும், அவரை ஓய்வு செய்ய விடாமல் தடுப்ப தன் மூலம் அவருக்கு பெரிதாக நெருக்குதல் ஏற்படுத்த முடியாது என்பதும் அதிகார வர்க்கத் திற்கு தெரியும். ஆனால் இவர் பணி ஓய்வு பெறு வதை நிறுத்தி வைப்பதன் மூலமாகவும், பணி யிடை நீக்கம் வாயிலாகவும், தற்போதுள்ள நிர்வாகி கள், புதிதாக அரசுப் பணியில் சேர்ந்தவர்கள், சங்கத்தின் பணிகளில் உதவுபவர்கள், சாதாரண அரசு ஊழியர்கள் ஆகியோர் போராட்டக் காலங் களில் அலுவலகத்தை விட்டு வெளியே வர பயம் உண்டாக்குவது அவர்கள் திட்டமாக இருக்கலாம். “பார்த்தீர்களா தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவருக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இனிமேல் போராட்டம், தர்ணா, ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம் என்று யாராவது வெளியே வந்து பாருங்கள். உங்களுக்கும் அதே கதிதான்” என்று மிரட்டுவதற்கான தோற்றத்தை ஏற்படுத்த முயற்சித்திருக்கிறது இந்த அதிகார வர்க்கம்.”

இந்தச் செய்தியை பதிவிட்டு தலைவர் தோழர் மு.சுப்பிரமணியன் அவர்களின் பணி ஓய்வினை நிறுத்தி வைத்ததை திரும்பப் பெறும் வரை தொடர் போராட்டங்கள் நடத்தப்படும் என்ற அறைகூவலையும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வைத்தது. அப்படி வைத்ததோடு மட்டுமல்லாமல் இன்றுவரை தொடர் போராட்டங்களும் அவரின் பணி ஓய்வு நிறுத்தி வைப்பை திரும்ப பெறத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

35 ஆண்டுகள் பாரம்பரியம் மிக்க ஒரு இயக் கத்தை அதுவும் ஒற்றுமை குலையாத இயக் கத்தை ஒரு சிலர் கோடாரி எடுத்து வெட்ட வரும்போது அதை எதிர்த்து கேட்பதும் தடுத்துக் காப்பதுவும் அன்றோ முறையானதாக இருக்கும். உள் சங்க ஜனநாயகம் உள்ள ஒரு இயக்கத்தில் கருத்து முரண்பாடுகளுக்கு இடம் கொடுப்பதும் அந்த முரண்பாடுகளை விரிவான விவாத்திற்கு உட்படுத்தி தெளிவு பெறுவதும்தான் நம்முடைய இயக்கத்தின் அடிப்படை இயல்பாகும். விவாத களத்திற்குள் வைக்கப்பட வேண்டிய ஒரு பொருள், பொதுத் தளத்தில் பரவவிடப்பட்டு நமக்குள்ளேயே நாம் ஒரு போர்க்களம் காண வழிவகுத்துள்ளது வேதனைதரும் செயலாகும். எம்.ஆர்.ஏ. போன்ற முன்னணித் தோழர்கள் கட்டி வைத்திருக்கும் அனைத்துத்துறை அரசு ஊழியர் களின் ஒற்றுமையை, அந்த ஒற்றுமையை 35 ஆண்டுகள் காத்த முன்னணித் தோழர்களின் அளப்பறியத் தியாகங்களை நினைவு கூர்ந்து இந்த இயக்கம் கட்டமைக்கப்பட்டதன் உண்மை யான பொருளை உணர்ந்து நமக்குள் உண்டான கருத்து வேறுபாடுகளை ஆரோக்கியமான விவாதங்கள் மூலமாக களைந்து சமூகப் பணியாற்றுவோம் வாருங்கள்.

கருத்து வேறுபாடு உள்ளவர்களை இந்த சங்கம் எப்போதும் விரோதிகளாகவோ, துரோகி களாகவோ பார்த்தது கிடையாது. கருத்து வேறு பாடுகள் உள்ளவர்களின் கருத்து சரியானவை என்றால் அதை சங்கத்தின் பெரும்பான்மை தீர்மானிக்கும் சங்கம் ஏற்றுக்கொள்ளும். இந்த அமைப்பு எந்த ஒரு தனி நபருக்கான அமைப்போ, சர்வாதிகார இயக்கமோ அல்ல. எந்த பிரச்சனை யானாலும் ஜனநாயக மரபுகளின் வழியேதான் இதுநாள்வரை தீர்வு காணப்பட்டு வந்துள்ளது. அதே சமயம் செயற்குழுவில் விவாதிக்க வேண்டிய விஷயங்கள் பொது வெளிகளில் பரவவிடுவது சங்கத்தின் கட்டமைப்பை பாதித்து விடும். அன்னிய சக்திகள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சங்கத்தை பலவீனப்படுத்த முயற் சிப்பார்கள் என்பதை சங்கத்தின்பால் அக்கறை யுள்ள நிர்வாகிகளும், உறுப்பினர்களும் நினை வில் கொள்ள வேண்டும். நான் பெரியவன் நீ பெரியவன் என்பதை விட நாம் அனைவரையும் விட சங்கம் பெரியது என்பதையும் நாம் மறக்க லாகாது. முன்னோடித் தோழர்கள் வளர்த்திருக் கும் சங்கம் உயர்வானது. அதை தொன்று தொட்டு காக்கும் நம் தோழமையின் பந்தம் உன்னதமானது. உயர்வானவர்களாக இருப்போம். உன்னதம் காப்போம். ❖

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட மாநாடுகள்

## திண்டுக்கல்

மாவட்ட மாநாடு 23 மற்றும் 24 இரு நாட்கள் திண்டுக்கல்லில் நடைபெற்றது. 23.8.19 மாலை 4 மணிக்கு மாவட்ட மகளிர் மாநாடு நடைபெற்றது. மாவட்ட செயலாளர் எஸ்.முபாரக் அலி வரவேற்றார். செயல் அறிக்கையை மாவட்ட மகளிர் அமைப்பாளர் எம்.சுகந்தி சமர்ப்பித்தார். ஏ.சந்தனமேரிகீதா வாழ்த்துரை வழங்கினார். மாநில துணை தலைவர் எஸ்.தமிழ்ச்செல்வி நிறைவுரை ஆற்றினார். கி.ஜெசி நன்றி கூறினார்.

24.08.19 நடைபெற்ற மாவட்ட மாநாட்டிற்கு மாவட்ட தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். சங்க கொடியை மாவட்ட தலைவரும், சம்மேளனக் கொடியை மாவட்ட செயலாளரும் ஏற்றி வைத்தனர். மாவட்ட துணைத் தலைவர் டி.ராஜமாணிக்கம் வரவேற்றார். ஏ.நாராயணசாமி அஞ்சலி தீர்மானம் முன்மொழிந்தார். மாநிலத் தலைவர் (பொறுப்பு) ஏ.செல்வம் துவக்க உரை ஆற்றினார். செயலாளர் எஸ்.முபாரக் அலி வேலை அறிக்கையும், பொருளாளர் கே.ராஜேந்திரன் வரவு செலவு அறிக்கையும் தாக்கல் செய்தார்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் எஸ்.ஜேம்ஸ், சிஐடியு கே.பிரபாகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட நிர்வாகிகள் எம்.வீரகடம்பகோபு, எஸ்.அப்துல் ரகுமான், எம்.மகாமுனி, எம்.சுகந்தி ஆகியோர் தீர்மானங்கள் முன்மொழிந்தனர். முன்னாள் மாவட்ட தலைவர் சி.தங்கவேல் கௌரவிக்கப் பட்டார்.

தலைவராக ஜெ.எஸ்.விஜயகுமார், செயலாளராக எஸ்.முபாரக் அலி, பொருளாளராக கே.ராஜேந்திரன், துணை தலைவர்களாக எம்.வீரகடம்பகோபு, ஆர்.மங்களபாண்டியன், டி.ராஜமாணிக்கம், எஸ்.அப்துல்ரகுமான், இணைச் செயலாளர்களாக எம்.சுகந்தி, ஏ.நாராயணசாமி, ஆர்.மகுடபதி, வி.ஜெயபால் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். துணை தலைவர் ஆர்.மங்களபாண்டியன் நன்றி கூறினார்.

## கரூர்

10-வது மாவட்ட மாநாடு 2019 ஆகஸ்ட் 23ம் தேதி மாலை 3.00 மணிக்கு மகளிர் மாநாடு முதல் நிகழ்வாக எழுச்சியோடு துவங்கியது. மாநாட்டிற்கு மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் தலைமை தாங்கினார். மாவட்ட மகளிர் துணைக் குழு உறுப்பினர் பூங்கோதை வரவேற்புரை யாற்றினார். செயல் அறிக்கையினை மாவட்ட மகளிர் அமைப்பாளர் எம்.செல்வராணி சமர்ப்பித்தார். துறைவாரி சங்க நிர்வாகிகள் கீர்த்தனா, பிரவீனா, சகுந்தலாராணி, சித்ரா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். எல்.ஐ.சி. ஊழியர் சங்கத்தின் தஞ்சைக் கோட்டத் துணைத் தலைவர் எம்.சைலஜா சிறப்புரையாற்றினார். மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் எஸ்.தமிழ்மணி நன்றியுரையாற்றினார். இம்மகளிர் மாநாட்டில் 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர். இம்மாநாட்டில் மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளராக எம்.செல்வராணி மீண்டும் தேர்வு செய்யப்பட்டார். பிரவீனா, சித்ரா, மீரா, ஜானகி, கீர்த்தனா, தனலட்சுமி, ராஜலட்சுமி, சகுந்தலாராணி, புவனேஸ்வரி, ஜமுனாராணி, சரோஜா, சாந்தி, தமிழ்மணி, சிவகாமி, லட்சுமி ஆகியோர் மகளிர் துணைக்குழு உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

2ம் நாள் நிகழ்வாக 2019 ஆகஸ்ட் 24ம் தேதி காலை பிரதிநிதிகள் மாநாடு எழுச்சியோடு துவங்கியது. துவக்க நிகழ்வாக அரசு ஊழியர் சங்கக் கொடியினை சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் மு.சுப்பிரமணியன், சம்மேளனத்தின் கொடியினை மாநிலச் செயலாளர் என்.ஜனார்த்தனன் ஏற்றி வைத்தனர். மாநாட்டிற்கு மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் தலைமை தாங்கினார்.

அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத்தின் கோட்டத் தலைவர்களுள் ஒருவரான சிவராமன் வரவேற்புரை நிகழ்த்தினார். மாவட்டத் துணைத் தலைவர் என்.வெங்கடாச்சலம் அஞ்சலித் தீர்மானம் வாசித்தார். மாநிலத் துணைத் தலைவர் மு.சுப்பிரமணியன் மாநாட்டினை துவக்கி வைத்து உரையாற்றினார்.

வேலை அறிக்கையினை மாவட்டச் செயலாளர் கெ.சக்திவேல் மற்றும் நிதிநிலை அறிக்கையினை மாவட்டப் பொருளாளர் பொன்.ஜெயராம் ஆகியோர் சமர்ப்பித்தனர். மாவட்ட துணைத் தலைவர் சி.கண்ணன், மாவட்ட இணைச் செயலாளர்கள் பெ.திருநாவுக்கரசு, ஆர்.தாமோதரன், கே.சிவகாமி, கே.கருணாகரன் ஆகியோர் தீர்மானங்களை

முன்மொழிந்தனர். தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் ஐ.ஜெயராஜ், வங்கி ஊழியர் சங்கத்தின் ஐ.வெங்கடேசன், தமிழ்நாடு அஞ்சல் ஊழியர் சங்கத்தின் சாமிநாதன், தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் ஐ.ஜான்பாட்ஷா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநிலச் செயலாளர் என்.ஜனார்த்தனன் நிறைவுரையாற்றி னார். மாவட்ட இணைச் செயலாளர் கே.செல்ல முத்து நன்றியுரையாற்றினார்.

மாநாட்டில் மாவட்ட தலைவராக மு.மகாவிஷ்ணன், மாவட்டச் செயலாளராக கெ.சக்திவேல், மாவட்டப் பொருளாளராக பொன்.ஜெயராம், துணைத் தலைவர்களாக எம்.எஸ்.அன்பழகன், சி.கண்ணன், கே.செல்ல முத்து, என்.வெங்கடாச்சலம், இணைச் செய லாளர்களாக பெ.திருநாவுக்கரசு, ஆர்.தாமோ தரன், வி.டி.ராஜேந்திரன், கே.கருணாகரன், தணிக்கையாளராக க.பிரகாஷ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

மாலையில் லைட் ஹவுஸ் கார்னரில் இருந்து புறப்பட்ட பேரணியை அகில இந்திய அஞ்சல் ஊழியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் என்.விஸ்வநாதன் துவக்கி வைத்தார். பேரணி யின் முடிவில் பொது மாநாடு எழுச்சியோடு துவங்கியது.

மாநாட்டிற்கு மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் என்.வெங்கடாச்சலம் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநிலத் துணைத் தலைவர் மு.சுப்பிரமணியன் துவக்கி வைத்து உரையாற்றி னார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செய லாளர் கெ.சக்திவேல் விளக்கவுரையாற்றினார்.

சிஐடியு மாவட்டத் தலைவர் ஜி.ஜீவானந்தம் வாழ்த்துரை வழங்கினார். நிறைவாக மாநிலச் செயலாளர் என்.ஜனார்த்தனன் நிறைவுரையாற்றி னார். மாவட்ட பொருளாளர் பொன்.ஜெயராம் நன்றியுரையாற்றினார்.

## கன்னியாகுமரி

மாவட்ட 11 வது மாவட்ட மாநாடு நாகர்கோவில் அரசு ஊழியர் சங்க அரங்கில் 24 ஆகஸ்ட் 2019 சனிக்கிழமை அன்று நடைபெற்றது. மாநாட்டிற்கு மாவட்ட தலைவர் எஸ்.கனகராஜ் தலைமை வகித்தார். மாவட்ட துணை தலைவர் லீடன்ஸ்டோன் வரவேற்றார். மாவட்ட இணைச் செயலாளர் அருள்சீலி அஞ்சலி தீர்மானம் நிறைவேற்றினார். மாநில பொதுச் செயலாளர் எம் அன்பரசு துவக்க உரையாற்றினார். மாவட்ட செயலாளர் சி.எஸ்.கிறிஸ்டோபர் செயலாளர் அறிக்கை சமர்ப்பித்தார். பொருளாளர் உ.சுமதி பொருளாளர் அறிக்கை வாசித்தார். மாநிலச் செயலாளர் சி.ஆர்.ராஜகுமார், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க முன்னாள் மாநில செயலாளர் ஏ.வி.மூர்த்தி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

மாநாட்டில் புதிய மாவட்ட தலைவராக எஸ்.கனகராஜ் மாவட்ட செயலாளராக சி.எஸ்.கிறிஸ்டோபர், மாவட்ட பொருளாளராக உ.சுமதி மாவட்ட துணை தலைவர்களாக லீடன் ஸ்டோன், சூரியநாராயணன், ராயல்ஆறுமுகம், பாலகிருஷ்ணன், இணைச் செயலாளர்களாக விஜயகுமார், வேல்முருகன், செய்யத்அலி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநிலத் துணைத் தலைவர் குமாரவேல் நிறைவுரை ஆற்றினார். எம்.கில்பர்ட் சதீஷ் நன்றி கூறினார். பிரதிநிதிகள் மாநாட்டைத் தொடர்ந்து கிருஷ் ணன்கோவில் சந்திப்பிலிருந்து அரசு ஊழியர்கள் பேரணி நடைபெற்றது. நாகர்கோவில் அரசு ஊழியர் சங்க அலுவலக வளாகத்தில் நடை பெற்ற பொது மாநாட்டிற்கு மாவட்ட தலைவர் எஸ்.கனகராஜ் தலைமை வகித்தார். மாவட்ட பொருளாளர் சுமதி வரவேற்றார். மாவட்ட செயலாளர் சி.எஸ்.கிறிஸ்டோபர், மாநில துணைத்தலைவர் குமாரவேல், பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் பேசினர். மாவட்ட இணைச் செயலாளர் செய்யத்அலி நன்றி கூறினார்.

## தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்ட மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட புதிய நிர்வாகிகள் பட்டியல் விவரம் வருமாறு: தலைவராக செந்தூர்ராஜன், செயலாளராக முருகன், பொருளாளராக மு.தமிழரசன், துணைத் தலைவர்களாக என்.வெங்கடேசன், அண்ணாமலை பரமசிவன், மகேந்திரபிரபு, ஞா.ஞானராஜ், இணைச் செயலாளர்களாக அ.சின்னதம்பி, மூ.மூர்த்தி, எஸ்.பொன்சேகர், அ.சாம்டேனியல்ராஜ் தேர்வு செய்யப்பட்டனர்.

## நீலகிரி

அரசு ஊழியர் சங்கம் நீலகிரி மாவட்ட 13ஆவது மாநாடு 23.8.2019 அன்று மாவட்டத்

தலைவர் ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது. அஞ்சலி தீர்மானத்தை மாவட்ட இணைச் செயலாளர் சிவதாசன் வாசித்தார். மாவட்ட துணைத் தலைவர் சாந்தகுமாரி வரவேற்றார். மாநில செயலாளர் சி.ஆர்.ராஜ்குமார் துவக்கவுரை யாற்றினார். ஏ.ஆர்.ஆசரா செயலாளர் அறிக்கை யும், பொருளாளர் அறிக்கை சி.பரமேஸ்வரியும் தாக்கல் செய்தனர். ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் சு.வெங்கடேசன், எல்ஐசி ஊழியர் சங்க நிர்வாகி கோபால் ஆகியோர் வாழ்த்தி பேசினர். பொது செயலாளர் மு.அன்பரசு நிறைவுரையாற்றினார். மாவட்ட இணை செயலாளர் கே.எஸ்.சலீம் நன்றி கூறினார். மாவட்ட தலைவராக முத்துக்குமார், மாவட்ட துணைத் தலைவர்களாக சாந்தகுமாரி, பரமேஸ்வரி, சலீம், கந்தசாமி, இணைச் செயலாளர்களாக இளங்கோ, விஜயா, ரமேஷ், லோகேஸ்வரி, தணிக்கையாளர்களாக ஐயனார், பார்த்தசாரதி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## வடசென்னை

வடசென்னை மாவட்ட மாநாட்டு 16.8.2019 அன்று நடைபெற்றது. பிற்பகல் மகளிர் மாநாடு 3 மணி அளவில் தியாகிகளுக்கு அஞ்சலியுடன் துவங்கியது. வரவேற்பு குழு தலைவர் எஸ்.ஏ.வெற்றிராஜன் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட தலைவர் ம.அந்தோணிசாமி தலைமை யில் நடைபெற்றது. மாநில மகளிர் துணைக் குழு உறுப்பினர் பா.சுந்தரம்மாள் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். மகளிர் செயல்பாடுகள் குறித்த வேலை அறிக்கையினை மாவட்ட அமைப்பாளர் சரஸ்வதி முன்வைத்தார். மகளிர் மாநாட்டினை வாழ்த்தி பட்டதாரி ஆசிரியர் கழக மாநில மகளிர் அமைப்பாளர் அருணா, தென்சென்னை மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் சுமதி ஆகியோர் பேசினர். “சமூகச் சூழலும் பெண்களின் நிலையும்” என்ற தலைப் பில் வழக்கறிஞர் சுசீலா ஆனந்த் கருத்துரை வழங்கினார். மாவட்ட செயலாளர் ஜெ.பட்டாபி மகளிர் செயல்பாட்டு அறிக்கைக்கான தொகுப் புரையை வழங்கினார். மாவட்ட மகளிர் குழு உறுப்பினர் செல்வராணி நன்றி கூறினார்.

17.8.2019 அன்று காலை 11 மணியளவில் பெரியமேடு பெரியண்ண தெருவில் நடைபெற்ற பேரணியை மாநில பொருளாளர் எம்.தங்கராஜ் துவக்கி வைத்தார். பேரணியின் முடிவில் கொடியேற்ற நிகழ்ச்சி நடைபெற்றது. சங்கக் கொடியினை மாவட்ட தலைவர் ம.அந்தோணி சாமி, சம்மேளன கொடியினை பொதுச் செயலாளர் அன்பரசு ஆகியோர் ஏற்றி வைத்தனர். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தியபின் மாநாட்டு அரங்கில் மாவட்ட துணைத் தலைவர் குண சேகரன் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். வரவேற்பு குழு தலைவர் எஸ்.ஏ.வெற்றிராஜன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட தலைவர் ம.அந்தோணிசாமி தலைமையில் மாநாடு நடைபெற்றது. மாநில பொருளாளர் எம்.தங்கராஜ் துவக்க உரையாற்றினார். மாவட்ட செயலாளர் ஜெ.பட்டாபி வேலை மற்றும் ஸ்தாபன அறிக்கையை முன்வைத்தார். மாவட்ட பொரு ளாளர் எஸ்.பார்த்திபன் வரவு செலவு அறிக்கையை முன்வைத்தார். மாவட்ட துணைத் தலைவர்கள் மற்றும் இணைச் செயலாளர்கள் மற்றும் பகுதி குழு நிர்வாகிகள் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். மாநாட்டினை வாழ்த்தி சிஐடியு மாவட்ட செயலாளர் சி.திருவேட்டை, காப்பீட்டு கழக ஊழியர் சங்க மாநில மகளிர் அமைப்பு செயலாளர் ஆர்.சர்வ மங்களா, தென்சென்னை மாவட்ட செயலாளர் வெங்கடேசன், தமிழாசிரியர் கழகத்தின் கங்காதரன், சென்னை பள்ளி ஆசிரியர் சங்கத்தின் சத்தியநாதன், பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் சாந்தகுமார், கல்லூரி ஆசிரியர் கழகத்தின் காந்தி ராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாநாட்டில் தலைவராக பா.சுந்தரம்மாள், செயலாளராக ம.அந்தோணிசாமி, பொருளாளராக ஏழுமலை, மாவட்ட துணைத் தலைவர்களாக பார்த்திபன், பத்மநாபன், குணசேகரன், சாதிக் பாஷா, மாவட்ட இணைச் செயலாளர்களாக ஜெ.சரஸ்வதி, வி.விஜயகுமரன், சிவகுமார், ஜி.மகேந்திரன், தணிக்கையாளர்களக டி.வாசுகி, ருக்மாங்கதன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இறுதியாக பொதுச் செயலாளர் மு.அன்பரசு உரையாற்றினார் மாவட்ட இணைச் செயலாளர் விஜயகுமார் நன்றி கூறினார்.

## புதுக்கோட்டை

27.08.19 அன்று நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் தலைவராக ஜபருல்லா, செயலாளராக ரெங்கசாமி, பொருளாளராக பழனிச்சாமி, துணைத் தலைவர்களாக குமரேசன், குணசேகரன், மனோகரன், கருப்பையா இணைச் செயலாளர் களாக சுபி, பத்மாவதி, பாலமுருகன், செல்வம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். ❖

# வட்டக் கிளை மாநாடுகள்

### ஒட்டன்சத்திரம்

*தலைவர் பழனிச்சாமி தலைமை தாங்கினார். செயலாளர் பிரபு பாண்டியன் வேலை அறிக்கை தாக்கல் செய்தார். பொருளாளர் மெய்யர் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தார். விவாதங்களுக்கு பின்னர் வட்ட தலைவராக பழனிச்சாமி, துணை தலைவர்களாக மகுடபதி, ஜெயராமன், செயலாளராக மெய்யர், இணைச் செயலாளர்களாக லெட்சுமணசாமி, சண்முகம் பொருளாளராக தேர்வு செய்யப்பட்டனர். நிர்வாகிகளை வாழ்த்தி மாவட்ட செயலாளர் முபாரக் அலி நிறைவுரை ஆற்றினார்.*

### தரங்கம்பாடி

*வட்ட மாநாடு செம்பனார்கோயில், பரசலூர் ஊராட்சி மன்ற கட்டிடத்தில் வட்டத் தலைவர் மாரி.தட்சிணாமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. ஊரக வளர்ச்சி துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் எஸ்.தியாகராஜன் துவக்கவுரையாற்றினார். வட்டச் செயலாளர் சி.வாசுகி வேலை அறிக்கையையும், தணிக்கையாளர் கே.முருகானந்தம் நிதிநிலை அறிக்கையையும் சமர்ப்பித்தனர். விவாதங்களுக்குப் பின்னர் அறிக்கைகள் ஏற்கப்பட்டன.*

*துறைவாரி சங்க நிர்வாகிகள் எம்.சி.ஜீவா, பொன்.ராஜேந்திரன், சி.நல்லமுத்து, கே.அபிராமி, அரசு ஊழியர் சங்க மாவட்டப் பொருளாளர் பா.ராணி, மாவட்ட இணைச் செயலாளர் எம்.நடராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் நிறைவுரையாற்றினார்.*

### ஓசூர்

*கிருட்டிணகிரி மாவட்டம், ஓசூர் வட்டக் கிளை மாநாடு10.08.2019 அன்று ஓசூர் சாரதா பங்ஷன் ஹாலில் நடைபெற்றது. கொடியேற்றம், தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய பின் மாநாடு துவங்கியது. வட்ட தலைவர் வி.சிவா தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் நடராஜன் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். அறிக்கைகள் எழுத்து பூர்வமாக முன்வைக்கப் பட்டு விவாதித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

*தலைவராக வி. சிவா, துணைத் தலைவர்களாக முருகன், அந்தோணிராஜன், செயலாளராக திம்மராஜ், இணைச் செயலாளர்களாக வி.சுரேஷ் குமார், ஹேமா நந்தினிதேவி, வி.ஆறுமுகம், பொருளாளராக சி.கல்யாணசுந்தரம், மாவட்ட செயற்குழு உறுப்பினராக பள்ளியப்பா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.*

*முன்னாள் மாவட்ட செயலாளர் சி.பி.ஜெயராமன் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட தலைவர் சந்திரன் நிறைவுரையாற்றினார். மாநாட்டில் மாவட்ட மாநாட்டு நிதியாக ரூ.25,000/-, அரசு ஊழியர் மாத இதழ் சந்தா 25 மாவட்ட மையத்திற்கு வழங்கப்பட்டது. மாநாட்டில் 48 பெண்கள் உட்பட 179 பேர் கலந்து கொண்டனர்.*

### திருச்சி வட்டக் கிளை 1

*திருச்சிராப்பள்ளி வட்டக்கிளை-1 ன் 12வது வட்ட மாநாடு 28.08.2019 அன்று மாலை திருச்சி துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) அலுவலகத்தில் வட்டக் கிளை தலைவர் சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்றது. அஞ்சலி தீர்மானத்தை இணைச் செயலாளர் ராஜமாணிக்கம் வாசித்தார். இணைச் செயலாளர் அருள்பிரகாசம் வரவேற்புரையாற்றினார். மாவட்ட தலைவர் எம்.வி.விவேகானந்தன் துவக்கவுரையாற்றினார். செயலாளர் முனைவர் கா.பால்பாண்டி வேலை அறிக்கை சமர்ப்பித்தார். மாவட்ட துணைத் தலைவர் எ.லட்சுமணன், மாவட்ட இணைச் செயலாளர் சுந்தராஜன், பொது சுகாதாரத்துறை அலுவலர் சங்கத்தின் மோகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.*

*மாநாட்டில் தலைவராக வி.சொக்கலிங்கம், துணைத் தலைவர்களாக எம்.ராஜ்குமார், சிவசங்கரன், க.விக்னேஷ், பெருமாள்ராஜ், செயலாளராக க.சக்திவேல், இணைச் செயலாளராக அருள்பிரகாசம், ராஜமாணிக்கம், பத்மா, ராஜலெட்சுமி, பொருளாளராக சுரேஷ்பிரபு, செயற்குழு உறுப்பினர்களாக சுந்தரபாண்டியன் மற்றும் ரத்தினகிரி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட செயலாளர் வளனரசு நிறைவுரையாற்றினார். சுரேஷ்பிரபு நன்றி கூறினார்.*

## அம்பத்தூர்-ஆவடி

3.8.2019 அன்று அம்பத்தூர்-ஆவடி பகுதி குழு மாநாடு திருமுல்லைவாயிலில் கொடியேற்றத் துடன் மாநாடு துவங்கியது. அரசு ஊழியர் சங்க கொடியினை பகுதி தலைவர் வேல்பாண்டி மற்றும் சம்மேளனக் கொடியினை மாவட்ட துணைத் தலைவர் சுந்தரம்மாள் ஏற்றி வைத்தனர். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய பின் மாவட்ட துணைத் தலைவர் பத்மநாபன் துவக்க உரையாற் றினார். செயலாளர் என்.வெங்கடகிருஷ்ணன் வேலை அறிக்கையையும், ஜி.வேலு பொரு ளாளர் அறிக்கையையும் சமர்ப்பித்தனர். மகளிர் செயல்பாடுகள் குறித்து மகளிர் குழு அமைப்பாளர் வாசுகி அறிக்கையை சமர்பித்தார். மாவட்ட துணை தலைவர் ப.சுந்தரம்மாள் சிறப்புரை ஆற்றினார். பகுதி குழு நிர்வாகிகள் தீர்மானங் களை முன்மொழிந்தனர். மாநாட்டினை வாழ்த்தி காவல் அடிப்படை ஊழியர் சங்கத்தின் மாநில தலைவர் டி.ஜி.சேகர், சத்துணவு ஊழியர் சங்கத்தின் ஐடாஅர்ஜினாபாய், ஏ.சந்திரசேகர் மற்றும் அழகையா, எஸ்.அருள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட செயலாளர் ஜெ.பட்டாபி மாநாட்டினை நிறைவு செய்து பேசினார். இறுதியாக பகுதி துணை தலைவர் பி.குமுதவல்லி நன்றி கூறினார்.

தலைவராக தாண்டி, செயலாளராக என்.வெங்கடகிருஷ்ணன், பொருளாளராக ஜி.வேலு, துணைத் தலைவர்களாக வி.பொன்னு ராஜ், பி.குமுதவல்லி, இணை செயலாளர்களாக டி.வாசுகி, எஸ்.மனோகரன், பி.செந்தில், எம்.சந்தானம், கோபி, தணிக்கையாளர்களாக ஐடாஅர்ஜினாபாய், உலகம்மாள் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

❖

# கிருஷ்ணகிரியில் நிதியளிப்பு கூட்டம்

கிருட்டிணகிரி மாவட்ட மாநாட்டு நிதியளிப்பு கூட்டம் 23.08.2019 அன்று கிருட்டிணகிரி அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. மாநாட்டு வரவேற்பு குழு தலைவர் எஸ்.ஹரிராவ் (BEFI) தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் ஆர்.நடராஜன் வரவேற்று பேசினார். மாவட்ட தலைவர் பி.சந்திரன் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். கிருட்டிணகிரி, ஓசூர், தேன்கனிக்கோட்டை, சூளகிரி ஆகிய 4 வட்டக் கிளை சார்பாக ரூ.1,25,000/-, மாவட்ட பிற்பட்டோர் நலத்துறை விடுதி காப்பாளர் சங்க மாவட்ட தலைவர் நாராயணசாமி ரூ.20,000/- அரசு ஊழியர் சங்க மேனாள் மாவட்ட செயலாளர் சி.பி.ஜெயராமன் ரூ.10,000/- வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்ட செயலாளர் பிரதாப் ரூ.5,000/-ஐ மாநில துணைத் தலைவர் எஸ்.பார்த்திபனிடம் மாநாட்டு நிதியாக வழங்கினார்கள்.




தஞ்சாவூரில் நடைபெறும் 13வது மாநில மாநாடு சிறப்பாக நடைபெற கிருட்டிணகிரி மாவட்ட மையத்தின் சார்பில் மாநில துணைத் தலைவர் எஸ்.பார்த்திபன் அவர்களிடம் ரூ.25,000 மாநில மாநாட்டு நிதி வழங்கப்பட்டது.

2003ஆம் ஆண்டு நடைபெற்ற அரசு ஊழியர்-ஆசிரியர் போராட்டத்தின் போது தமிழக அரசால் ஒரே அரசாணை மூலம் 1,75,000 அரசு ஊழியர்-ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு நடுத்தெருவில் நின்றபோது நமக்கு ஆதரவு கரம் நீட்டி-எந்த எதிர்பார்ப்புமின்றி அடுத்த கணம் உச்ச நீதிமன்றம் சென்று T.K.Rangarajan VS TamilNadu Govt என்ற வரலாற்று புகழ்பெற்ற வழக்கின் மூலம் தீர்ப்பை பெற்று அனைவரையும் பணியில் அமர்த்தி தொழிற்சங்க இலக்கணம் படைத்தது சிஐடியு. அத்தகைய பெருமை கொண்ட இந்திய தொழிற்சங்க மையத்தின் 16ஆம் அகில இந்திய மாநாடு தமிழ் மண்ணில் தொழிலாளி வர்க்கத்தின் உரிமை காக்கும் மாநாடாக நடைபெற உள்ளது.

சிஐடியு-வின் அகில இந்திய மாநாடு வெற்றி பெற கிருட்டிணகிரி மாவட்ட மையத்தின் சார்பாக ரூ 10,000/- மாநில துணைத் தலைவர் பார்த்திபனிடம் நிதி வழங்கப்பட்டது. இறுதியில் மாவட்ட பொருளாளர் தேவராஜ் அனைவருக் கும் நன்றி கூறினார்.

❖

# 4.8.2019 அன்று சென்னையில் நடைபெற்ற
# மாநில செயற்குழுக் கூட்டத்தில்
# விருதுநகர் மாவட்ட மையத்தை கலைத்தது குறித்த
# ஸ்தாபன நடவடிக்கைக் குறிப்புகள்

அன்பார்ந்த தோழர்களே, வணக்கம்.

கனத்த இதயத்தோடு உங்களுடன் சில நிகழ்வுகளை பகிர்ந்துகொள்ள வேண்டிய தேவை நேர்ந்திருக்கிறது. தன்னலங்கருதாத நம்முடைய முன்னோடிகள் பலர் சிந்திய இரத்தங்களும் வியர்வைகளுமே தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற கட்டுக்கோப்பு மிக்கதொரு இயக்கத்தை உருவாக்கித் தந்திருக்கிறது என்பதை நாம் யாரும் மறந்துவிடலாகாது. நமது சங்கம் அரசு ஊழியர்களின் நலன்களை காக்கும் இயக்கமாக மட்டுமில்லாது சமூகநலனில் அக்கறை கொண்ட இயக்கமும்கூட என்பதை நம்முடைய இயக்கத்தின் வரலாற்றினை புரட்டுபவர்கள் கண்டிப்பாக புரிந்து கொள்வர்.

எந்த ஒரு மாற்றத்தையும் ஒரே நாளில் நிகழ்த்தி விட முடியாது என்பதையும், உலகில் நிகழ்ந்துள்ள ஆகப்பெரிய மாற்றங்கள் அனைத்தும் இடைவிடாத போராட்டங்களாலும், அளப்பரிய தியாகங்களாலும் உருவானவை என்பதையும் நாம் அறிவோம். நாம் பெற்றுள்ள, தற்போது அனுபவித்து வருகிற ஒவ்வொரு உரிமைக்குப் பின்னரும் ஒரு போராட்ட வரலாறு உள்ளது. அந்த உரிமைகளையும் சலுகைகளையும் பாதுகாத்து அவற்றை நம்மைத் தொடர்ந்து வரும் சந்ததியின் கைகளில் பத்திரமாக சேர்க்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நம் அனைவருக்கும் உண்டு. ஆக, நாட்டைத் தற்போது பீடித்துள்ள சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டிய அவசியமும் அவசரமும் நிகழ்காலத்தில் உள்ளது.

சங்கத்தை கட்டுக்கோப்பாக அமைக்க வேண்டும். அதில் ஊழியர் நலனும் சமுதாய நலனுமே ஓங்கி யிருக்க வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்ட சங்க அமைப்பு விதிகளில் நமது முன்னோடித் தோழர்கள் வகுத்துள்ள நோக்கங்களும் குறிக்கோள் களும் தனிச்சிறப்பு வாய்ந்தவையாகும்

**நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள்**

☞ தமிழக அரசு ஊழியர்களுக்கு 'வாழ்க்கை ஊதியம்' மற்றும் நல்ல பணி நிலையை உறுதி செய்தல்

☞ அரசு ஊழியர்களின் சமூக - கலாச்சார - ஒழுக்க மற்றும் பொருளாதார நிலைகளை மேம்பாடு செய்தல்

☞ ஊழியர்களிடையே தோழமை உணர்வை மேம்படுத்துதல்

☞ நிர்வாகத்தை திறமையாகவும், சாதாரண மக்களின் தேவையை உணர்ந்தும் செயல்பட வைத்தல்; மற்றும் நிர்வாகத்தில் லஞ்சம், ஒரு சார்பு ஆதரவு, வேண்டியவர்களுக்கு சலுகை இல்லாது செய்தல்.

☞ ஊழியர்களிடையே தேசிய உணர்வை வளர்த்தல்

☞ தொழிலாளர் வர்க்கத்தினரிடையே ஒற்றுமை யையும், ஒருமைப்பாட்டையும் உருவாக்குதல்; ஒத்த நோக்கங்களும் குறிக்கோள்களும் கொண்ட அமைப்பு களுடன் இணைந்து பொதுவான கோரிக்கைகளை வென்றெடுத்திட ஒன்றுபட்ட இயக்க நடவடிக்கை களை மேற்கொள்ளுதல் மற்றும் சங்கத்தின் உரிமையை பாதுகாத்தல்

☞ சங்க உறுப்பினர்களின் நடவடிக்கைகள் மற்றும் சங்க விதிகளின் கட்டுப்பாடு ஆகியவை இச்சங்க அமைப்பு விதிகளின்படி அமையும் என்ற நிபந்தனையுடன் ஒத்த நோக்கங்கள் மற்றும் கொள்கைகள் கொண்ட இதர அரசுப் பணி சார்ந்த அமைப்புகளுடன் அதன் உறுப்பாக இணைந்து கொள்ளுதல்

☞ நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ உறுப்பினர்கள் பழி வாங்கப்படுவதிலிருந்து பாதுகாத்தல்

☞ மேற்குறிப்பிட்ட நோக்கங்களையும், குறிக்கோள்களையும் வென்றடையத் தேவையான நடவடிக்கைகளை சங்கம் மேற்கொள்ளும்.

மேற்கண்ட உயரிய நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை லட்சியமாகக் கொண்டு சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் செயல்பட வேண்டும் என்பதற்காகவும் சங்கத்தின் தலையாய லட்சியத் தினை ஊழியர்களுக்கு அறியச்செய்து சங்கத்தின்பால்

அவர்களை ஈர்க்கவும் நமது சங்கம் தொடர்ந்து பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வருவதை நாம் அனைவரும் அறிவோம்.

இராணுவ கட்டுப்பாட்டுடன் செயல்பட்டு வரும் நம் சங்கத்தின் மீதும் நிர்வாகிகள் மீதும் நம்மில் ஒருவரே சங்கத்தின் பெயருக்கும் புகழுக்கும் களங்கம் கற்பிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவது மிகுந்த வேதனையளிக்கும் செயலாகும்.

கண்ணாடி மாளிகைக்குள் இருந்து கல்லெறிவது போல் அவருடைய ஒவ்வொரு செயலும் அமைந்திருந்த போதிலும், மாநிலத் தலைமை அவர் மேற்கொண்டு வரும் தவறான நடவடிக்கைகளை நெறி படுத்தும் முயற்சியிலும் சரிபடுத்தும் முயற்சியிலும் தோல்வி கண்டே வருகிறது.

தோழர் ச.இ.கண்ணன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளராக, மாநிலச் செயற்குழு உறுப்பினராக, எல்லாவற்றுக்கும் மேலாக மாநிலச் செயலாளராக பொறுப்பு வகித்து நீண்ட காலம் செயல்பட்டு வந்தவராவார். தற்போது விருதுநகர் மாவட்ட துணைத் தலைவராக பொறுப்பு வகித்து வரும் அவரின் நடவடிக்கைகள் சங்க ஜனநாயக செயல்பாட்டிற்கு முரணாகவும், சங்க உள் இயக்க ஜனநாயக செயல்பாட்டிற்கு ஊறு விளைவிக்கும் செயலாகவும் தொடர்கிறது என்பதைச் சுட்டியும், சங்க கட்டமைப்பை மீறி சங்க ஒற்றுமையை சீர்குலைத்திடும் வகையில் செல்பட்டு வரும் அன்னாரது தொடர் நடவடிக்கை காரணமாக மாநில செயற்குழு அவர்தம் செயலுக்காக தோழர் ச.இ.கண்ணன் அவர்களை சங்கத்தின் அடிப்படை உறுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கிடுவது என விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்த மாநில செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்ட மாநில செயற்குழுவில் விவாதித்து அதன்பின் மாநில செயற்குழு முடிவாற்றியது.

மேற்படி மாநில செயற்குழு முடிவின் அடிப்படையில் விருதுநகர் மாவட்ட செயற்குழுவினை கூட்டி தோழர் ச.இ.கண்ணன் அவர்களை அவர்தம் சங்க அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டுமெனவும் கடந்த 30.09.2018ல் நடைபெற்ற மாநில செயற்குழு தீர்மானித்தது. மேற்படி முடிவினை விருதுநகர் மாவட்ட செயற்குழு ஒரு மாத காலத்திற்குள் மேற்கொள்ள வேண்டுமென மாநில செயற்குழு கேட்டுக் கொண்டது.

ஆனால், மேற்படி முடிவினை அமுலாக்கிட மாவட்ட செயற்குழு எவ்வித முயற்சியினையும் உரியகாலத்தில் மேற்கொள்ளவில்லை. பின்னர் சுமார் 1½ மாதங்கள் கடந்த நிலையில் மாநில பொறுப்பு நிர்வாகியும் மாநிலத் துணைத்தலைவருமான தோழர் ந.குமரவேல் பங்கேற்புடன் 09.11.2018 அன்று நடைபெற்ற விருதுநகர் மாவட்ட செயற்குழுவில் மேற்படி முடிவினை மாநில செயற்குழு விவாதத்தின் அடிப்படையில் அமலாக்குவது குறித்து விவாதிக் காமல் குற்றச்சாட்டு குறிப்பாக இல்லை எனத் தொடங்கி, பொதுவானதாகவும் மேலோட்டமாக உள்ளதாகவும் குறிப்பிட்டு மாநில செயற்குழுவின் முடிவு சங்க அமைப்பு விதிக்கு எதிரானது என மாநில செயற்குழுவின் மீது குற்றம் சாட்டும் விதத்திலும், மாநில செயற்குழு விருதுநகர் மாவட்டத்திற்கு கட்டளையிட முடியாது என மாநில செயற்குழுவின் ஜனநாயக செயல்பாட்டினை கேள்விக்குள்ளாக்கியும் மேற்படி மாநில செயற்குழு முடிவினை மாநில செயற் குழுவிற்கு திருப்பி அனுப்புவதாகவும் ஏகோபித்து மாவட்ட செயற்குழு முடிவாற்றியுள்ளதாக மாவட்ட செயலாளரால் 17.12.2018ம் தேதியிட்ட கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் தோழர் ச.இ.கண்ணன், சங்கத்தின்மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டால் அதனை மாவட்ட செயற்குழுதான் எதிர்கொள்ள வேண்டும் என்பதால் அவரிடம் விளக்கம் கோருவது எனவும் போதிய அவகாசத்துடன் அவர் வழங்கும் விளக்கத் தினை மாவட்ட செயற்குழுவில் பரிசீலிப்பது எனவும் ஒரு தீர்மானத்தினையும் மேற்படி மாவட்ட செயற்குழு மாநில மையத்திற்கு தெரிவித்தது.

மேற்கண்ட தீர்மான நகலானது, கூட்டம் நடைபெற்று ஒருமாதத்திற்கு பிறகுதான் மாநில மையத்திற்கு அனுப்பப்பட்டது என்றபோதிலும் மாவட்ட செயற்குழு நடைபெற்ற அடுத்த நாள் முதலே மாநிலத்தின் பல வாட்ஸ்அப் குழுக்களில் இம்முடிவு பதிவுசெய்யப்பட்டு செயற்குழு முடிவு களுக்கு முரணான இல்லாததை, நடக்காததை தவறான மற்றும் பொய்யான கருத்துக்கள் உள்ளடங்கிய தகவல்கள் பொதுவிவாதத்திற்கு மாவட்ட நிர்வாகிகளால் உட்படுத்தப்பட்டது என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்த செய்கையானது நமது சங்கத்தின் மாநில நிர்வாகிகளுக்கும் மாவட்ட நிர்வாகிகளுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஒரு நிர்வாகி அல்லது உறுப்பினர் மீது சங்கத் தலைமை சில நடவடிக் கைகளை முன்னெடுத்து அது நிலுவையில் இருக்கும் போது சம்பந்தப்பட்ட நிர்வாகியோ உறுப்பினரோ தன்னுடைய விளக்கத்தையோ மறுப்பையோ சங்கத் தலைமைக்கு தெரிவித்து தன் தரப்பை பதிவு செய்ய வேண்டும் என்பது சங்க மரபாகும்.

ஆனால் அதற்கு மாறாக சம்பந்தப்பட்ட நபர் மாநிலத் தலைமையின் நடவடிக்கையை மறுதலித்த துடன் மாநிலச் செயற்குழு விருதுநகர் மாவட்ட மையத்திற்கு கட்டளையிட முடியாது என மாநிலத்

தலைமையின் தீர்மானத்தை கொச்சைபடுத்தி அதை பல வாட்ஸ்ஆப் குழுமங்களிலும் பரவவிட்டு சங்கத்தின் உள் ஜனநாயகத்தை கொச்சைபடுத்தியிருப்பது ஜனநாயம் மீறிய செயலாகும்.

தோழர் ச.இ.கண்ணன் அவர்களுடைய இச்செய்கை ஜனநாயக நடைமுறையில் தேர்வு செய்யப்பட்டு செயல்பட்டு வரும் மாநில மையத்தின் மீது சேற்றை வாரி இறைக்கும் செயலாகும். மாநில மையத்தின் செயல்பாடுகளில் குறைபாடுகள் இருப்பதாக, நடவடிக்கைக்கு உட்பட்ட நிர்வாகியோ அல்லது மாவட்ட மையமோ கருதினால் அதை மாநில மையத்திற்கு, மாநில செயற்குழுவின் நடவடிக்கைகள் சங்க அமைப்பு விதிகளுக்கு முரணாக உள்ளதாக சுட்டிக்காட்டி தம் தரப்பை தெளிவுபடுத்தியிருக்கலாம். ஆனால் அதைத் தவிர்த்து பொது வெளியில் வாட்ஸ் ஆப், பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்கள் வாயிலாக செய்திகளை உள்நோக்கத்துடன் பரப்புவது நமது சங்க அமைப்பு விதிகளுக்கு எதிரானது மட்டுமல்ல முரணானதும் கூட.

தோழர் ச.இ.கண்ணன் அவர்கள் சங்கத்தின் நீண்டநாள் உறுப்பினர் மற்றும் நிர்வாகி என்ற அடிப்படையிலேயே அவருடைய சங்கத்தின் ஜனநாயக நடைமுறைகளுக்கு எதிரான செயல்களை கூட பொதுவெளியில் பரப்பிவிடாமல் கண்ணியம் காத்தது மாநில மையம்.

30.09.2018ம் தேதி நடைபெற்ற மாநில செயற்குழுவில் நடைபெற்ற விவாதங்களின் பதிவுகளையும், குறிப்பான குற்றச்சாட்டுக்களையும் பொது வெளியில் கசியவிட்டால் அது தோழர் ச.இ.கண்ணனுடைய ஒப்புமையை (image) பாதிக்கும் என்ற நோக்கிலேயே நாம் அதை வெளியிடவில்லை. அவர் மீது குறிப்பான குற்றச்சாட்டுக்கள் எதுவும் விளக்கமாக வெளியிடாததற்கு காரணம் இதுவேயாகும்.

மாநில மையத்தின் பெருந்தன்மையை குறுகிய மனப்பான்மையோடு பார்த்ததோடு மட்டுமல்லாமல் அதை வைத்து தன்னை தற்காத்துக்கொள்ளும் முகமாக தோழர் ச.இ.கண்ணன் மாநில மையத்தை கொச்சைபடுத்தி அறிக்கை வெளியிட்டு அதை வாட்ஸ்ஆப், பேஸ்புக் போன்ற சமூக வலைத்தள பெருவெளியில் வாரி இறைத்திருப்பது அறிவார்ந்த, ஆக்கபூர்வ சிந்தனை உள்ள, கௌரவமிக்க ஒரு மாவட்ட துணைத்தலைவரின் செய்கையல்ல.

சங்க அமைப்பு விதியின் விதி எண் 14.5.1 "சங்கத்தின் நிர்வாகச் செயல்பாட்டிற்கு, மாநில செயற்குழுவே முழுப் பொறுப்பாகும்" எனவும் விதி 14.9.1 "சங்கத்தின் நோக்கத்திற்கும், குறிக்கோளுக்கும் ஏற்ப தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்" எனவும் வரையறை செய்துள்ளது.

மேலும் சங்க அமைப்பு விதி 4.1ல் "தமிழகத்திலுள்ள எல்லா வட்ட/பகுதி/மாவட்ட மையங்களையும் உள்ளடக்கி/ஓர் மாநில அமைப்பாக இச்சங்கம் செயல்படும்" என்று வரையறுக்கப்பட்டுள்ளபடி சங்கம் என்பது ஒருமையான அமைப்பு (unitary organization) என்பதும் சங்கத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அதன் உள்ளார்ந்த கட்டுப்பாட்டுடன் அமலாக்கும் பொறுப்பு மாநில செயற்குழுவிற்கு உள்ளதுடன் அதனை அமலாக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்பதும் தெளிவு.

மேற்படி விதிகளின் அடிப்படையிலேயே, தோழர் ச.இ.கண்ணன் சங்கத்தின் கட்டுப்பாட்டினை மீறி தொடர்ந்து செயலாற்றி வந்ததை விரிவாக விவாதித்த பின்னரே மாநில செயற்குழுவின் கூட்டு ஞானத்தின் (collective wisdom) அடிப்படையில் தோழர் கண்ணனை சங்க அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கவேண்டும் என மாநில செயற்குழு முடிவாற்றியது.

ஆனால் விருதுநகர் மாவட்ட செயற்குழுவோ, மாநில செயற்குழுவின் கட்டுப்பாட்டிற்குள் வராத, தன்னிச்சையான அதிகாரம் கொண்ட மாவட்டமாக தன்னை கருதிக்கொண்டு தங்களை கேள்விகேட்க மாநில மையத்திற்கு அதிகாரமில்லை என தீர்மானத்தினை இயற்றி மாநில செயற்குழுவின் முடிவிற்கு கட்டுப்படாமல் மீறியுள்ளது.

நமது சங்கத்தின் உயரிய அமைப்பு மாநில செயற்குழுவாகும். எல்லா மாவட்டங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் இச்செயற்குழுவில் ஒரு உறுப்பினர் மீதோ நிர்வாகியின் மீதோ பெரும்பான்மை செயற்குழு உறுப்பினர்கள் விவாதித்து முடிவெடுத்து அதை தீர்மானமாக இயற்றிய பின் மாற்றுக் கருத்து இருந்தாலும் அமலாக்க வேண்டுமே தவிர அந்த தீர்மானத்தின் மீது மறுதலிப்பு கூறவோ, மறுக்கவோ அந்த சங்கத்தின் தலைவர் முதற்கொண்டு யாருக்கும் அதிகாரம் இல்லை. அப்படிப்பட்ட, நிர்வாகத்தின் ஒரு உயரிய அமைப்பு மேற்கொண்ட தீர்மானத்தை காலில் போட்டு மிதித்து, மாநில செயற்குழுவின் நடவடிக்கைகள் மீதே களங்கம் விளைவிக்கும் செயலில் ஈடுபட்ட விருதுநகர் மாவட்ட செயற்குழுவின் செய்கைகள் கண்டிக்கத்தக்கவை மட்டுமல்ல தண்டிக்கத் தக்கவையும்கூட.

தங்கள் மாவட்ட துணைத்தலைவரின் பதவியை காப்பதற்காக விருதுநகர் மாவட்டத்தின் நிர்வாகிகள் அனைவரும் மாநில செயற்குழுவின் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த மறுத்த நிலையில் அவர்களுக்கு மேலும் மேலும் தங்களை திருத்திக்கொள்ள வாய்ப்புகள் வழங்கப்பட்டது. இடையே, இடைவிடாத, ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கைகளுக்காக

இக்காலகட்டத்தில் தொடர் போராட்டங்கள் நடைபெற்று வந்த நிலையில், அடுத்தடுத்த மாநில செயற்குழு கூட்டங்களில் போராட்ட உத்திகள் விவாதிக்கப்பட்டதாலும் விருதுநகர் மாவட்டத்திற்கு போதிய காலஅவகாசம் அளிக்கலாம் என கருதிய தாலும் இப்பிரச்சினை விரைவுபடுத்தப்படாமல் நிறுத்தப்பட்டது.

பிறகு, கடந்த 16.06.2019 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில செயற்குழுவில், மேற்படி விருதுநகர் மாவட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும் அது மாநில செயற்குழுவின் முடிவினை அமலாக் காமல் மாநில செயற்குழுவின் ஜனநாயக நடைமுறை களை கேள்விக்குள்ளாக்கும் வகையில் தீர்மானம் இயற்றி அவற்றை சமூக வலைத்தளங்களில் பரவவிட்டது குறித்தும், சங்கத்தின் உள்கட்டமைப்பு ஜனநாயகத்தை பொதுவெளியில் பலர் பேசக்கூடிய விவாதப் பொருளாக ஆக்கி சங்கத்திற்கு அவப்பெயர் ஏற்பட காரணமாக இருந்தது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இச்செயற்குழுவில் மாநில செயற்குழுவிற்கு உள்ள அமைப்பு விதியின்படியும் அதன் வரம்பு குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. மேலும், சமூக வலைதளங்களில் சங்கத்தின் முடிவுகளை கொச்சைப் படுத்தும் போக்குடன் சங்க கட்டுப்பாட்டினை மீறிய செயல்களில் ஈடுபட்டதோடின்றி சங்கத்தை சீர்குலைக்கும் செயல்களில் விருதுநகர் மாவட்ட செயற்குழு நடந்து கொண்டது மிகப்பெரிய சங்க ஜனநாயக விதி மீறல் என்று மாநில செயற்குழு முடிவெடுத்தது. சங்க ஜனநாயக சீர்குலைவுகளுக்கு விருதுநகர் மாவட்ட மையம் பொறுப்பேற்க வேண்டும் என்றும் மாநில செயற்குழு தீர்மானித்தது.

"ஸ்தாபன நலன் கருதியும் ஒற்றுமை கருதியும் அடுத்த செயற்குழுவிற்கு முன்னதாக தோழர் ச.இ.கண்ணன் அவர்கள் அடிப்படை உறுப்பினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட வேண்டுமென்ற முடிவை மீண்டும் விருதுநகர்மாவட்ட செயற்குழு வினை கூட்டி விவாதித்து முடிவாற்றப்பட வேண்டும்."

இந்த முடிவை அமலாக்கும் விதமாக தோழர் ச.இ.கண்ணன் அவர்களை அடிப்படை உறுப்பினர் பட்டியலிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்க மீண்டும் ஒரு கடைசி வாய்ப்பு விருதுநகர் மாவட்ட மையத் திற்கு வழங்கப்பட்டது. மறுக்கும்பட்சத்தில் விருதுநகர் மாவட்ட நிர்வாகத்தை சங்க அமைப்பு விதிகளின்படி (விதி 9.1) கலைக்கப்படும் எனவும் தீர்மானம் இயற்றப்பட்டது.

மேற்படி முடிவின் தொடர்ச்சியாக மாநிலத் தலைவர்(பொ) ஆ.செல்வம் அவர்களும் கலந்து கொண்ட 13.07.2019 அன்று மாவட்டத் தலைவர் சு.முத்துராஜ் தலைமையில் நடைபெற்ற விருதுநகர் மாவட்ட செயற்குழு கூட்டத்தில், கடந்த 09.11.2018 அன்று நடைபெற்ற மாவட்ட செயற்குழுவின் முடிவுகள் மாநில செயற்குழுவில் விவாதிக்கப்பட வில்லை என்றும் தோழர் ச.இ.கண்ணனை அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்குவது என்ற முடிவை மறுபரிசீலனை செய்யாத காரணத் தாலும் மாவட்ட செயற்குழு எழுப்பிய சந்தேகங் களுக்கு மாநில மையம் மற்றும் மாநில செயற்குழு பதில் கூறாத காரணத்தினாலும் ச.இ.கண்ணனை நீக்கக்கோரும் மாநில செயற்குழு தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய மாநில செயற்குழுவிற்கு திருப்பி அனுப்புவது என முடிவாற்றியதாக மாவட்ட செயலாளரின் 02.08.2019ம் தேதிய கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில செயற்குழுவின் நடவடிக்கைகள் மீது அச்சம் கொண்டு விருதுநகர் மாவட்ட நிர்வாகம் அடுத்த தீர்மானமாக, மாநில செயற்குழுவினை அச்சுறுத்தும் தொனியில், மாவட்ட மையத்தின் செயல்பாட்டினை முடக்கும் முடிவு எட்டப்படுவதை தடுத்திட தேவைப்பட்டால் நீதிமன்றத்தை நாட மாவட்ட மையத்திற்கு அதிகாரம் வழங்கப்படுவ தாகவும் ஒரு தீர்மானம் இயற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி செயற்குழு கூட்டம் தொடர்பாக, மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்ட மாநிலத் தலைவர் (பொ) தோழர் ஆ.செல்வம், கூட்டம் அமைதியான சூழலில் நடைபெறவில்லை எனவும் மாநில செயற் குழுவின் முடிவினை, அம்முடிவு எடுக்கப்பட வேண்டிய கட்டாயத்திற்கான அவசியத்தையும் எடுத்துரைக்க முற்படுகையிலேயே அவரை பேச விடாமல் கூச்சல் குழப்பம் ஏற்படுத்தப்பட்டதாகவும் சில மாவட்ட செயற்குழு தோழர்கள் வன்முறை ஏற்படுத்தும் தொனியில் மிரட்டல் போக்கில் செயல்பட்டதாகவும் கூட்டத் தலைவரோ அல்லது மாவட்ட செயலாளரோ சூழலை தணிக்கவில்லை என்றும் மாநில மையத்திற்கு தகவல் தெரிவித் துள்ளார்.

விருதுநகர் மாவட்ட மையத்தின் ஒட்டுமொத்த செயல்பாட்டினை மேற்படி நிகழ்வுகள் மட்டுமன்றி தொடர்ச்சியாக நோக்குங்கால், சங்கத்தின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டிற்கும் கண்ணியத்திற்கும் ஊறுவிளைவிப்பதோடு சங்கத்தின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களுக்கு எதிராகவும் சங்க ஒற்றுமையினை சீர்குலைத்து சங்க செயல்பாடு களை முடக்கும் நோக்கில் தொடர்ந்து விருதுநகர் மாவட்ட நிர்வாகம் செயல்பட்டுவருவது புலனாகிறது.

மேலும் சங்கத்தின் உயர்ந்தபட்ச நிர்வாக அமைப்பான மாநில செயற்குழுவின் ஜனநாயக செயல்பாடுகளை கேள்விக்குள்ளாக்குவது என்பது சங்கத்தின் நிருவாக செயல்பாட்டினை முற்றிலும் சீர்குலைக்கும் செயலாகும். மேலும் மாநில செயற்குழுவிலும் நமது அமைப்பின் உயர்ந்தபட்ச மாநில பிரதிநிதித்துவப் பேரவையிலும், வாட்ஸ்அப் குழுக்களை உருவாக்குவது மற்றும் பதிவிடுதல் தொடர்பாக பல அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளை உருவாக்கி அளித்து அம்முடிவுகளை மீறினால், ஸ்தாபன நடவடிக்கைக்கு உள்ளாக்க நேரிடும் எனவும் முடிவாற்றப்பட்டுள்ள நிலையில், தொடர்ச்சியாக சங்க செயல்பாடுகளை கொச்சைப்படுத்தி பொதுத்தளங்களில் பதிவிடுவது, வசைபாடுவது என சங்க வாட்ஸ்அப் குழுக்கள் போலியாக உருவாக்கப்பட்ட குழுக்கள் போன்ற வற்றில் பதிவிடுவது என முற்றிலும் சங்க செயல் பாட்டினை சீர்குலைக்கும் போக்கு கையாளப்பட்டு சங்கத்தின் தோற்றம் சிதைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாநில மாநாட்டில் பொதுச்செயலாளர் பொறுப்பிற்கு போட்டியிட்டு தோல்வி அடைந்த நிலையில், சங்க செயல்பாட்டினை முடக்குவது என்ற சங்கவிரோத முடிவுடன், ஸ்தாபன விதிகளுக்கு மாறாக, மாவட்ட மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட செயலாளரை இராஜிநாமா செய்ய வைத்து தோழர் கண்ணன் விருதுநகர் மாவட்ட செயலாளராக மாநில மாநாடு நடைபெற்று முடிந்த சிலதினங்களில் பொறுப்பேற்றுக் கொண்டார். இதன்மூலம் மாநில செயற்குழுவில் கலந்துகொள்ளும் உரிமையினை பெற்றுக்கொண்டார்.

மாவட்ட செயலாளராக மாவட்ட மாநாட்டில் தேர்வு செய்யப்பட்டு மாநில மாநாட்டில், ச.இ. கண்ணனுக்கு ஆதரவாக, சங்கத்தின் உயரிய விழுமியங்களுக்கு எதிராக வெளிப்படையாக மாநாட்டு அரங்கிலும் வெளியிலும் அவதூறு பிரச்சாரத்தை மேற்கொண்ட தோழர் லெட்சுமி நாராயணன், மாநில மாநாடு முடிந்த மறுநாளே மாவட்ட செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்துக்கொண்டு ஒரு வட்டக் கிளையின் நிருவாகியாக மாநில செயற்குழுவிற்கு தாம் வருகை புரிவதை உறுதிசெய்துகொண்டார். மேற்படி செயல் பாடுகள் சங்கத்தின் விதிகளை தனிநபர் நலன் களுக்கு உகந்த வகையில் வளைத்துக்கொள்ளவும் மாநில செயற்குழுவில் குழப்பத்தை விளைவிக்கவும் இவர்கள் தொடர்ந்து பயன்படுத்தி வந்ததை தெளிவுபடுத்துபவை ஆகும்.

இதன் தொடர்ச்சியாக, கடந்த 2018ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 21-22 ஆகிய தேதிகளில் மதுரையில் நடைபெற்ற மாநில பிரதிநிதித்துவ பேரவையில், சங்கத்தின் உறுப்பினர் அல்லாத வெளிநபர் ஒருவர் சங்கத்தின் செயல்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கவும் சங்கத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தவும் பரப்பிய அடிப்படை ஆதாரமற்ற தகவலை அவதூறு செய்யும் நோக்கில், பிரதிநிதி களுக்கு வழங்கி முன்னெப்போதும் இல்லாத அசாதாரண சூழலை விருதுநகர் மாவட்டத் தோழர்கள் ஏற்படுத்தினர்.

சங்க கட்டுப்பாட்டை தொடர்ந்து மீறும் வகையில் அவதூறுகளை தோழர் ச.இ.கண்ணன் செய்துவந்த தால், அன்னார் மாநில செயற்குழு உறுப்பினர் என்ற வகையில் நடவடிக்கை எடுக்க மாநில செயற்குழு விற்கு முன்மொழிவு வரஇருப்பதை அறிந்த தோழர் ச.இ. கண்ணன், உடனடியாக மாவட்ட செயலாளர் பொறுப்பினை இராஜிநாமா செய்துவிட்டு மாவட்ட துணைத்தலைவராகவும் மீண்டும் தோழர் லெட்சுமி நாராயணன் மாவட்ட செயலாளராகவும் பொறுப்பு களை சங்க அமைப்பு விதிகளுக்கு எதிராக மாற்றம் செய்து கொண்டனர்.

இப்போக்குகள், தங்களது தன்னிச்சையான சுயலாபங்களுக்காகவும், சங்க கட்டுப்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ளவும் சங்க விதிகளை தமக்குச் சாதகமாக வளைத்துக்கொண்டனர் என்பதை தெளிவுபடுத்தும் நிகழ்வுகளாகும்.

இருப்பினும், மாநில செயற்குழு, விருதுநகர் மாவட்ட துணைத்தலைவராக மாறிய தோழர் ச.இ. கண்ணனின் தொடர்ச்சியான, சங்க அமைப்பு விதிகளுக்கு மாறான, சங்க கட்டுப்பாட்டினை குலைத்திடும், சங்க நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களுக்கு எதிராக செயல்படுவதையெல் லாம் விரிவாக விவாதித்து, சங்க மாநில பிரதிநிதித் துவப் பேரவையில் அந்நியர்கள் ஊடுருவி பேரவையை சீர்குலைப்பது போன்ற தோற்றத்தை உருவாக்கிய குழுவாத போக்கிற்கு கண்டனம் தெரிவித்து சங்கத்தின் அடிப்படை உறுப்பினர் பட்டியலிலிருந்து நீக்குவது என 30.09.2018 அன்று நடைபெற்ற கூட்டத்தில் முடிவுசெய்தது.

சங்க ஜனநாயக மாண்பினை கருத்தில்கொண்டு, அன்னார் மாவட்ட செயலாளர் பொறுப்பிலிருந்து மாவட்ட துணைத் தலைவராக மாற்றிக் கொண்டு விட்டதையும் கருத்திற்கொண்டு விருதுநகர் மாவட்ட செயற்குழு மேற்படி முடிவினை ஒருமாத காலத் திற்குள் அமலாக்க வேண்டும் என மாநில செற்குழு தீர்மானம் இயற்றியது.

சங்கத்தின் உயர்ந்தபட்ச நிருவாக அமைப்பான மாநில செயற்குழுவின் முடிவினை அமலாக்க வேண்டியது மாவட்ட நிருவாக/செயற்குழுக்களின் கடமை என்ற நிலையில் (விதி 14.5.1 மற்றும் 14.9.1),

அம்முடிவினை விருதுநகர் மாவட்ட நிர்வாகம் உதாசீனப்படுத்தியுள்ளதுடன், மாநில செயற்குழு விற்கு உள்ள அதிகார வரம்பினையும் கேள்விக் குள்ளாக்கி மாநில செயற்குழுவின் முடிவுகளுக்கு கட்டுப்பட தொடர்ந்து மறுத்துவரும் நிலையில், சங்க நலனை காத்திடவும் ஒருமைப்பாட்டையும் கட்டுப்பாட்டையும் காத்திடவும் அதன் மூலம் சங்கத்திற்கு விடப்பட்டுள்ள அச்சுறுத்தல்களி லிருந்து காப்பாற்றி சங்கத்தின் உயரிய நோக்கங் களை எய்திடவும், "நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ சங்கத்தின் நோக்கங்களுக்கும், கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும், சங்க அமைப்பு விதிகளுக்கும் புறம்பாக செயல்படும் எந்த ஒரு வட்ட/ மாவட்ட கமிட்டியையும் மாநில செயற்குழு கலைக்கலாம்" என்ற சங்க அமைப்பு விதிகளின்படி சங்கத்தின் 35 ஆண்டுகால நீண்ட நெடிய வரலாற் றில், மாநில செயற்குழு ஒரு மாவட்ட கமிட்டியினை கலைப்பது என்பது அரிதிலும் அரிதான சூழலில் மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டு அதன்படி 4.8.2019 அன்று நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்தில் விருதுநகர் மாவட்ட மையத்தை கலைப்பது என்ற முடிவு தீர்மானாக இயற்றப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

தோழர்களே, மாநில செயற்குழுவின் இந்த முடிவு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 35 வருட நெடிய போராட்டப் பாதையில் கடுமையானதொன்றுதான் என்பதில் ஐயப்பாடில்லை. ஆனால் பலமுறைகள் திருந்த வாய்ப்புகள் வழங்கப்பட்டும் மூர்க்கத்தனமாக எதிர்க்கும் போக்கினை முழுநேரத்தொழிலாக மாற்றிக் கொண்டுவிட்ட தோழர் ச.இ. கண்ணன் அவர்களும், தங்கள் மாவட்ட நிர்வாகி என்ற அடிப்படையில் அவரின் அனைத்துவிதமான ஸ்தாபன விரோதச் செயல்களுக்கு துணைபோன மாவட்ட நிர்வாகிகளும் தங்களின் தவறுகளிலிருந்து தங்களை திருத்திக் கொள்வார்கள் என்று ஓராண்டு காலத்திற்கும் மேலாக மாநிலத் தலைமை நடவடிக்கைகளை வேகப்படுத் தாமல் இருந்தது. ஆனால் ஸ்தாபன நலன் கருதியும், நிதானத்துடன் செயலாற்றிய பெருந்தன்மையைக் கூட இவர்கள் “மாநில மையம் பயப்படுகிறது'' என்பதான பிரச்சாரமாக மாற்றி அதை சமூக வலைத்தளங்களில் பரவவிட்டு தமது முகத்திலேயே தாமே உமிழ்ந்துகொண்ட நிகழ்வுகளாக பரிணமித்த பின்னர் மாநில மையம் வேறு வழியின்றி விருதுநகர் மாவட்ட மையத்தை கலைப்பது என்ற கடுமையான முடிவுகளை மேற்கொள்ள வேண்டி வந்துள்ளது.

கலைக்கப்பட்ட விருதுநகர் மாவட்ட நிர்வாகத்தில் உடனடியாக ஒரு தற்காலிக கமிட்டி அமைக்கப்பட்டு நான்கு மாதங்களுக்குள் மாவட்ட நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டு முறைப்படி நிர்வாகிகள் தேர்ந்தெடுக் கப்படுவார்கள்.

என்னதான் நம் முன்னோடிகளின் அளப்பரிய காரியங்களை ஆகப்பெரிய தியாயகங்களை நாம் பயிற்சிப் பட்டறைகள் மூலம் பயின்றாலும், அவற்றை நேர்மையோடு உள்வாங்கி நெறிபிறழாமல் ஸ்தாபன நடைமுறைகளை கடைபிடிக்கும் தோழமைகளை உருவாக்கிடவும், ஆளுமைகளைக் கண்டெடுத்திட வும் நாம் தவறியிருக்கிறோம் என்பதை இந்நிகழ்வின் மூலம் கனத்த இதயத்தோடு பதிவு செய்கிறோம்.

கடுமையான ஸ்தாபன நடைமுறைகள் கொண்ட நமது இயக்கத்திலேயே பழிவாங்கத்துடிக்கும் உள்ளங்கள் உருவாகும் என்றால் இயக்கத்தின் ஸ்தாபன நடைமுறைகளை நாம் சரியாக கையாள வில்லை, கற்பிக்கவில்லை, கற்றுத்தேரவில்லை என்றே பொருளாகும். இனிவரும் காலங்களில் உரிய ஸ்தாபன நடைமுறைகளை கற்றுத்தேர்ந்து ஞானம் பெறுவோம்.

இயக்கம் எடுத்த முடிவினை இம்மியளவும் பிசகாமல் நிறைவேற்றுவதும், தயக்கமின்றி உரிமை களைத் தட்டிக்கேட்பதுவும், நடுக்கமின்றி நடுநிலை யோடு முடிவுகளை மேற்கொள்வதும், எடுத்த முடிவில் இறுதிவரை உறுதியோடு நிற்பதுவுமே நமக்கான சங்க இலக்கணங்கள்.

தலைமை வழிபாடுகளை தகர்த்தெரிந்ததும், பிம்பங்களின் பிரம்மாண்டங்களைப் பூணாததும், நீதி நேர்மை நியாயம் போன்றவற்றை உதட்டளவில் இல்லாமல் உயிரளவில் கடைபிடிப்பதும், ஊருக்கு உபதேசம் செய்துவிட்டு தனக்கு தனிதேசம் தேடும் தப்பிதங்களை கைக்கொள்ளாததுவுமே நமக்கான சங்க இலக்கணங்களாகும்.

ஒரு ஸ்தாபனம் துடிப்புடனும், கம்பீரத்துடனும், வலிமையுடனும் திகழ வேண்டுமென்றால் அதற்கு மேற்கூறிய நடவடிக்கைகள் மிகவும் அவசியமாகும். தோழர் எம்.ஆர். அப்பன் அவர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற மாளிகையை உறுதியான அஸ்திவாரத்துடன் கட்டினார் என்றால் அவரைத் தொடர்ந்து நமது முன்னோடிகள் அந்த மாளிகைக்கு வண்ணப்பூச்சு செய்து ஒளிரும் விளக்குகள் போட்டு உலகையே அதை திரும்பிப் பார்க்க வைத்தார்கள். நாமெல்லாம் இந்த மாளிகைக்கு ஒட்டடை அடித்து பராமரித்து வருகிறோம் அவ்வளவுதான். அதன் அடிப்படையில் நமது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மீது சிறு தூசிகூட விழாமல் பாதுகாப் போம், நமது செய்கையால், கடைபிடிக்கும் கொள்கை யால், விட்டுவிடாத லட்சியங்களால்.

**மு.அன்பரசு**
பொதுச் செயலாளர்

# தனியார் மயத்தை ஊக்குவிக்கும் தேசிய மருத்துவ குழு சட்டம் 2019

இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் தரமான உயர்தர மருத்துவ சேவையை வழங்குவதற்கான உத்தரவாதத்தை ஏற்படுத்தும் வகையிலும், அது மக்களின் தேவைக்கேற்ப கிடைத்திடும் வகையிலும் இந்திய மருத்துவ கல்வி முறையில் மாற்றங்களை செய்திட வேண்டிய அவசியம் உள்ளதென்ற முகவுரையுடன் தேசிய மருத்துவ குழு அமைத்தல் சட்டம் 2019 துவங்குகிறது. மேலும் உலக அளவில் மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப நெகிழ்வு தன்மையுடன் கூடிய பிரச்சனைகளை தீர்க்கக் கூடிய அதே நேரத்தில் உயர்ந்த நெறிமுறைகளுடன் கூடிய தரம் வாய்ந்த மருத்துவ சேவையை வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டது எனவும், சமமான பொதுவான மருத்துவ சேவையை அனைத்து இந்திய சராசரி குடிமகனுக்கும் வழங்குவதை உறுதி செய்வதும், மருத்துவ சேவையில் தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்குவதையும் உத்திரவாதப்படுத்துவதாகவும் வரையறை செய்கிறது.

மேலும் மருத்துவர்கள் பற்றாக்குறை தரமற்ற மருத்துவ சிகிச்சை மருத்துவ கல்வியில் நிலவக்கூடிய குறைபாடுகள் மற்றும் ஊழல் ஆகியவற்றை களைந்திட ஏற்கனவே உள்ள இந்திய மருத்துவக் கவுன்சிலால் பலனில்லை என்றும் புதிய தேசிய மருத்துவ குழு சட்டம் 2019 அதற்கு தீர்வாக அமையும் என்றும் கூறுகிறது.

இச்சட்டம் பல்வேறு புதிய புதிய கருத்தாக்கங்களை முன்வைக்கிறது. மருத்துவ கல்வியை தரப்படுத்தவும், மருத்துவ சேவையை விரிவாக்கம் செய்திடவும், தேசிய மருத்துவ குழு, மருத்துவ ஆலோசனை குழு, நன்னெறி மற்றும் மருந்து பதிவு வாரியம், ஆரோக்கிய பல்கலைக்கழகம், மருத்துவ தர மதிப்பீடு வாரியம், தேசிய தேர்வு வாரியம், தேசிய மருத்துவர் பதிவேடு, முதுநிலை மருத்துவக் கல்வி வாரியம், மாநில மருத்துவ குழு, மாநில மருத்துவ பதிவேடு, இளநிலை மருத்துவ கல்வி வாரியம் என பல்வேறு புதிய புதிய பதங்களை உருவாக்கி அவற்றின் செயல்பாடுகள் மற்றும் நடைமுறைகள் என்று பல்வேறு கட்டுப்பாடுகளையும் உருவாக்கியுள்ளது.

இச்சட்டம் பல்வேறு உற்சாகமான கருத்துக்களை முன்வைத்தாலும் இருவகையான முரண்பட்ட கருத்துக்களையும் முன்வைக்கிறது. இதுகுறித்து மிகப் பெரிய விவாதம் நடத்தப்படுவது அவசியமானதாகும்.

## தரமான மருத்துவ சேவையில் தடுமாற்றம்

உலக சுகாதார நிறுவனம் 1000 பேருக்கு ஒரு மருத்துவர் தேவை என்று பரிந்துரை செய்கிறது. இன்றைய நிலையில் இந்தியாவில் 1600 பேருக்கு ஒரு மருத்துவரும், தமிழகத்தில் 1500 பேருக்கு ஒரு மருத்துவரும் உள்ளனர். இதனை உயர்த்தி உலக சுகாதார நிறுவன பரிந்துரையை எட்டுவதற்கான முயற்சியை மேற்கொண்டு மருத்துவ சேவையை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் தேசிய மருத்துவ குழு 2019 பரிந்துரை செய்வது இதற்கு முரண்பாடாக உள்ளது. கல்வியை அடைய நீட் தேர்வினை எழுதி அதன் மூலம் மருத்துவக் கல்வியை துவங்கி முறையாக மருத்துவக் கல்லூரிகளில் படித்து பயிற்சி முடித்த மருத்துவ மாணவர்கள் அனைவரும் தங்களது படிப்பு முடித்து தேர்ச்சி பெற்ற பின்பு எக்ஸிட் என்ற தேசிய அளவிலான தேர்வில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே மருத்துவர்களாக அங்கீகரிக்கப்பட்டு மருத்துவ சேவையை தொடர முடியும். அவ்வாறு இல்லையெனில் அவர்கள் கல்லூரி தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பட்டங்கள் வாங்கினாலும் மருத்துவர்களாக பணியாற்ற முடியாது.

மேலும் முதுநிலை பட்டப் படிப்பு படிப்பதற்கும் இதே எக்சிட் தேர்ச்சி அவசியம் என்று பரிந்துரை செய்கிறது. இது மருத்துவம் கற்றவர்கள் மத்தியில் ஓர் சோர்வினை உருவாக்கும். ஏற்கனவே இங்கு மருத்துவக்கல்வி முடித்தவர்கள் அரசு மருத்துவமனைகளில் பணிபுரிய கல்லூரிக் கல்வியை முடித்த பின்பு ஒரு தேர்வினை எழுத வேண்டிய நிலையில் உள்ளனர். தற்போதைய சூழ்நிலையில் மாணவர்கள் மருத்துவக் கல்வியில் சேர்வதற்கு ஒரு நீட், மருத்துவராகப் பதிவு செய்திட ஒரு எக்சிட், மீண்டும் அரசு மருத்துவராகப் பதவி பெற ஒரு பொதுத் தேர்வு என்று மூன்று தேர்வுகளை எழுத வேண்டியுள்ளது. இவ்வாறாக முறையாக கல்வி கற்று வருபவர்களுக்கு பல்வேறு தகுதிப்படுத்தும், தகுதியை நிர்ணயிக்கும் தேர்வுகளை பரிந்துரை செய்யும் தேசிய மருத்துவ குழு 2019, ‘‘சமூக மருத்துவம்

வழங்குனர் என்ற லைசென்ஸ் பெற்றவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மருத்துவர்கள் இல்லாத இடங்களில் மருத்துவ சேவையை வழங்குபவர்களாக செயல்படுவார்கள் என்றும் பரிந்துரை செய்கிறது. இந்தியா போன்ற போதுமான கல்வியறிவு மருத்துவ விழிப்புணர்வு இல்லாத கிராமப் பகுதிகளில் இதுபோன்ற லைசென்ஸ் பெற்றவர்கள் எந்த அளவிற்கு மக்களின் நலனில் உயர் பாதுகாப்பில் அக்கறையுடன் செயல்படுவார்கள் என்பது கேள்விக் குறியே. ஒருபுறம் தரப்படுத்துதல் மறுபுறம் தரமற்ற வகையில் ஒரு சில ஆண்டுகள் பயிற்சி பெற்ற லைசென்ஸ்தாரர்கள் செயல்பட அனுமதிப்பதும் நகைமுரண் ஆகும்.

## இடஒதுக்கீட்டை மறுத்து தனியார்மயத்தை நோக்கி

அதேபோன்று தற்போதைய நிலையில் உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி அனைத்து தனியார் மருத்துவக் கல்லூரிகளிலும் 85 சதவீத இடங்களுக்கு அரசு நிர்ணயித்த கட்டணம் என்பது நடைமுறையில் உள்ளது. புதிய தேசிய மருத்துவக் குழு 2019 தனியார் கல்லூரிகள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களிலும் 50 சதவீத இடங்களுக்கு தாங்களே கட்டணம் நிர்ணயம் செய்து கொள்ளலாம் என்ற பரிந்துரையை முன் நிறுத்துகிறது. இதன் மூலம் தனியார்மயத்தை அதிகரிப்பதோடு ஏழை எளிய நடுத்தர மக்களின் மருத்துவக்கல்வி கனவில் மண் அள்ளிப் போடும் வேலையையும் மிகத்துல்லியமாக செய்கிறது. மேலும் தேசிய மருத்துவ ஆணையத்தின் கட்டுப்பாட்டில் மாநில மருத்துவக் கல்வி இணைக்கப்படும். தேசிய மருத்துவ ஆணையத்தில் பெரும்பாலான ஆணைய உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுவர். இதனால் மாநிலங்களில் பிரதிநிதித்துவம் குறைவதுடன் மாநில அரசுகளின் சுகாதார உரிமைகள் பறிக்கப்படும். அதேபோல் தேசிய மருத்துவ ஆணையத்தின் உறுப்பினர்கள் ஜனநாயக முறைப்படி தேர்வு செய்யப்படாமல் தேடுதல் குழு (Search Committee) மூலம் தேர்வு செய்யப்படுவர் என தெரிவிக்கிறது. ஏற்கனவே தேர்வு கமிட்டிகள் தேர்வு செய்த பல்வேறு பல்கலைக்கழக துணைவேந்தர்களின் நிலையை நாம் அறிந்திருக்கிறோம். இதே நிலைதான் தேசிய மருத்துவ ஆணையத்தின் உறுப்பினர் தேர்விலும் நடைபெறும் என்பது நிச்சயம்.

இன்றைய சூழ்நிலையில் நீட் தேர்வு வந்ததிலிருந்து புற்றீசல் போல் கோச்சிங் சென்டர்கள் இந்தியா முழுவதும் உருவாகியுள்ளது. இன்னும் புதிதாக எக்ஸிட் தேர்வு என்ற முறை வரும்போது மீண்டும் தனியார் கோச்சிங் சென்டர்கள் உருவாவதை யாராலும் தடுத்திட முடியாது. மொத்தத்தில் புதிய தேசிய மருத்துவ குழு 2019 பெரிய அளவில் மருத்துவ சேவையையும், தரமான மருத்துவர்களையும் உருவாக்கும் என்பதை விட தனியார் மருத்துவக் கல்வியிலும் மருத்துவ சேவையிலும் ஊக்கப்படுத்தும் என்பதே உண்மையாகும். தேசிய மருத்துவ குழு 2019 என்பது சமூக நீதியை பாதுகாப்பதில் இருந்து அரசின் பங்கேற்பினை குறைத்திடவே வழிவகை செய்திடும்.

- ***முனைவர் மதுரை சுகி***

# வாசகர் கடிதம்

கடந்த மாதம் இதழ் பார்த்தேன். தலையங்கம், பொதுச் செயலாளர் மேசை, பெரணமல்லூர் சேகரனின் ‘‘வெள்ளத் தனைய மலர் நீட்டம்...’’, சி.ஆர்.ராஜ்குமார் எழுதிய ‘‘சும்மாவா வந்தது ஓய்வூதியம்’’, ம.அந்தோணிசாமி எழுதிய கட்டுரை, ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை, சுகாதார செவிலியர் போராட்டம் போன்ற அனைத்து கட்டுரைகளும் படித்தேன். அருமையாக இருந்தது.

- **ரா.தட்சிணாமூர்த்தி**, கடலூர்

‘‘மார்க்சுக்காகவே வாழ்ந்த ஏங்கல்ஸ்’’ பெரணமல்லூர் சேகரனின் கட்டுரை அருமை. ராமன்-குகன், துரியோதனன்-கர்ணன் இவை புராணம். ஆனால் நட்புக்கு இலக்கணமாக திகழ்ந்தவர்கள் நிஜத்தில் மார்க்சுக்காகவே வாழ்ந்த ஏங்கல்ஸ் மட்டுமே. ‘‘தீண்டாமை எனும் தீட்டு கழிப்போம்’’ கட்டுரை வருணாசிரமத்தின் கோரமுகத்தை காட்டுகிறது. ‘‘தேசிய கல்விக் கொள்கை வரைவு அறிக்கை-2018’’ சிறப்பாக இருந்தது.

- **ஜெ.கலாவதி**, வேலூர்



# மகாகவிக்கு மரணம் இல்லை

**பெரணமல்லூர் சேகரன்**

'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே'

என்ற தமது பாடல் வரிகளுக்கேற்ப எதற்கும் யாருக்கும் அஞ்சாத வாழ்க்கையைப் பெருமையுடனும் துணிவுடனும் இந்த மண்ணுலகில் 38 வருடங்கள் வாழ்ந்து மறைந்தார் மகாகவி பாரதி.....!

அறம் நம் கண்முன்னே கொஞ்சம் கொஞ்சமாக சிதையும் போது நம்முன்னே தோன்றும் வரிகள்தான்.... 'தர்மத்தின் வாழ்வு தன்னைச் சூது கவ்வும் இறுதியில் தர்மமே வெல்லும்'..... !

தற்காலத்தில் ஓ.பன்னீர்செல்வம் போன்றவர்கள் பயன்படுத்துவது போல் அல்ல. பாரதி அறத்தின்பால் காத்திரமாய்ப் பயன்படுத்திய அவ்வார்த்தைகள் அர்த்த அடர்த்திமிக்கவை.

இப்போதுள்ள 'முண்டாசு கட்டிய பாரதி'யின் புகைப்படம் , யானை மிதித்து அடிபட்டுச் சீரான பின்பு பாரதிதாசனின் பார்வைக்காக சென்னை பாரிமுனையில்இருந்த ரத்தினா ஸ்டுடியோவில் எடுக்கப்பட்டு பாரதியாரால் பாரதிதாசனுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பாரதியின் மரணம் யானை மிதித்து நிகழ்ந்ததல்ல. யானையிடம் மிதிபட்டுச் சீரான பின் ஈரோட்டில் கருங்கல் பாளையத்தில் ஒருகூட்டத்தில் பேசுவதற்குச் சென்ற போது வயிற்றுப்போக்கினால் உண்டான தாக்கத்தில் சாதாரண தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டிய மருந்தைச் சூடான பார்லி கஞ்சியில் கலந்து கொடுத்ததால் உண்டானதே.

யானை தள்ளியதால் ஏற்பட்ட சுகவீனம் சரியாகி அலுவலகம் செல்லத் தொடங்கிய பின்னர், ஈரோடு கருங்கல்பாளையத்தில் வக்கீல் ஒருவர் தனது நூலக விழாவுக்கு பாரதியை அழைத்திருந்தார். பாரதியும் அங்கு ரயிலில் சென்றார். பாரதியை ரயில் நிலையத்தில் வரவேற்று அழைத்துவர அந்த வக்கீல் ச.து.சு.யோகியை (இளைஞராக இருந்தபோது) அனுப்பியிருந்தார். அவர் ரயில் நிலையத்தில் தலையில் தலைப்பாகை அணிந்த, மீசைவைத்த பாரதியாரை எதிர்பார்த்து, அப்படியொருவர் வரவில்லை என்று அந்த வக்கீலிடம் போய் சொன்னபோது, அவர் தன் எதிரில் உட்கார்ந்திருந்தவரைக் காண்பித்து இவர் யார் தெரிகிறதா என்றார். அவர்தான் பாரதியார். ச.து.சு.யோகி எதிர்பார்த்த தோற்றத்தில் அவர் வரவில்லை. அன்று மாலை நூல்நிலைய விழா தொடங்கியது. பாரதியார் சிலைபோல அசையாமல் மேடையில் உட்கார்ந்திருந்தார். தன் முறை வந்ததும் எழுந்து விரைப்பாக நின்றுகொண்டு அவர் பேசிய கருத்து 'நான் சாகாதிருப்பேன்' என்பது.

தேசியக் கவிஞர், கட்டுரையாளர், பத்திரிகையாளர், தேசபக்தர், அமைப்பாளர், ஆய்வாளர், செயல்வீரர், கதாசிரியர், மொழிபெயர்ப்பாளர் எனும் பன்முகப் பேராளுமை கொண்ட சுப்பிரமணிய பாரதியார் சிறந்த சொற்பொழிவாளராகவும் திகழ்ந்தார்.

சுதேசமித்திரன் இதழில் 'என் ஈரோடு யாத்திரை' என்ற தலைப்பில் தனிக்கட்டுரை வெளியிட்டார் பாரதி.

'இந்தச் சபையின் வருஷோத்ஸவக் கூட்டத்திற்கு நான் போய்ச் சேர்ந்தேன். என்னை ஒரு பிரசங்கம் பண்ணச் சொன்னார்கள். எனக்கு ஒரு விஷயம்தான் முக்கியமாகத் தெரியும். அதையே அங்கும் எடுத்துப் பேசினேன். அதாவது இந்த உலகத்தில் மானுடர் எக்காலத்திலும் மரணமில்லாமல் இருக்கக் கூடுமென்ற விஷயம்" என்று தனது கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடுகிறார் பாரதி.

'மரணமில்லாமல் வாழ்வது குறித்த என்னுடைய கொள்கையைப் பெரிய மகான்கள் கூடியிருக்கிற இச்சபையில் தர்க்கம் செய்யவே வந்திருக்கிறேன். எனது கொள்கையைத் தக்க ஆதாரங்களுடன் ருஜுப்படுத்தி உங்களுடைய அங்கீகாரம் பெறவே உங்கள் ஊருக்கு வந்திருக்கிறேன்'' என்று உரையைத் தொடங்கியதாக அக்கட்டுரையில் குறிப்பிடுகிறார் பாரதி.

ஹிரணியன், தன் மகன் பிரகலாதனிடத்தில் 'சொல்லடா ஹரியென்ற கடவுளெங்கே" என்று கேட்டதையும், அதற்குப் பிரகலாதன் 'நாராயணன் தூணிலும் உள்ளான், துரும்பிலும் உள்ளான்" என்று பதில் கூறியதையும் குறிப்பிட்டுவிட்டு, அதையொட்டிய தனது கருத்தை ஆணித்தரமாக எடுத்துரைத்தார் பாரதி.

'வல்ல பெருங்கடவுளில்லா அணுவொன்றில்லை. மஹாசக்தியில்லாத வஸ்துமில்லை சுத்த அறிவே சிவமென்றுரைக்கும் வேதம். வித்தகனாம் குரு சிவமென்று உரைத்தார் மேலோர்..." என்று அடுக்கடுக்காக ஆதாரக் கருத்துகளை எடுத்துரைத்து 'அத்வைத நிலைகண்டவருக்கு மரணமேது? பார் மீது யார் சாகினும் நான் சாகாதிருப்பேன் காண்பீர்'' என்று தனது பேச்சின் முதல் பகுதியில் குறிப்பிட்டுள்ளார் பாரதி.

‘நாணத்தைக் கவலையினைச் சினத்தைப் பொய்யை அச்சத்தை, வேட்கைதனை அழித்துவிட்டால் அப்போது சாவும் அங்கே அழிந்து போகும்’ என்று சித்தரெல்லாம் உரைத்திட்டார். இதனையே ஐரோப்பிய ஸயன்ஸ் சித்தாந்தங் களும் தெளிவுபடுத்துகின்றன. சினத்தை முன்னே வென்றிடுவீர், மேதினியில் மரணமில்லை. சினங்கொள்வார் தம்மைத் தாமே தீயாற் சுட்டுச் செத்திடுவாருக்கு ஒப்பாவார். சினம் கொண்டோர் பிறர் மேற்கொண்டு கவலைப்பட்டுத் தாம் செய்தது எண்ணித் துயர்க் கடலில் வீழ்ந்து சாவர். எனவே சினம் காரணமாகக் கவலையும், கவலையினால் சாவும் நேரிடுகின்றன'' என்று சாவிற்கான இன்னொரு காரணத்தை விளக்குகிறார் பாரதி.

‘அறக்கடவுள் புதல்வன் என்னும் உதிட்டிரனும் இறுதியில் பொறுமை நெறி தவறி இளையாருடன் பாரதப் போர் புரிந்தான். பாரத நாட்டைப் போர்க்களத்தே அழித்துவிட்டுப் புவியின் மீது வறுமையையும் கலியினையும் நிறுத்தி வானம் சேர்ந்தான். போரினால் புவியிலுள்ள உயிர்கள் எல்லாம் அநியாய மரணமெய்தல் கொடுமையன்றோ?'' என்று போரில்லா உலகம் பற்றி அக்கூட்டத்தில் போதித்தார் பாரதி.

‘நாடியிலே அதிர்ச்சியினால் மரணம்? என்று விஞ்ஞானி யாகிய ஜகதீச சந்திர வசு கூறுகின்றான். ஞானானுபவத்தி னாலும் இதுதான் முடிவு. கோபத்தால் நாடியிலே அதிர்ச்சி யுண்டாம்: கொடுங்கோபம் பேரதிர்ச்சி; அச்சத்தால் நாடி யெலாம் அவிந்து போகும்; கவலையினால் நாடியெல்லாம் தழலாய் வேகும். எனவே கோபத்தை வென்றிடவே பிறவற்றைத் தான் கொல்வதற்கு வழியென நான் குறிக்கிறேன்” என்று ஒரு ஞானிக்குரிய இலக்கணத்துடன் இக்கூட்டத்தில் எடுத்தியம்பினார் பாரதி.

‘மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வமென்றால் மனையாளும் தெய்வமன்றோ? பெண்ணுக்கு விடுதலை நீரில்லையென்றால் பின்னிந்த உலகிலே வாழ்க்கை யில்லை... வீட்டிலுள்ள பழக்கமே நாட்டிலுண்டு. வீட்டினில் தமக்கடிமை பிறராம் என்பவன் நாட்டினில் பிறரை அடிமைப்படுத்த நாடோறும் முயன்று நலிந்து சாவான்'' என்று பெண்ணடிமை புரிவோருக்கு எதிராகப் பிரகடனம் செய்கிறார் பாரதி.

‘எல்லா மதங்களின் சாரமும் இதுதான். பூமியிலே கண்டமைந்த மதங்கள் கோடி; யாவினுக்கும் உட்புதைந்த கருத்து ஒன்றே. ஈரமில்லா நெஞ்சுடையார் சிவனைக் காணார்” என்று மானுட ஒற்றுமையை வலியுறுத்தி ‘அன்பே அடிநாதம்'' என்ற பொருள்பட தனது அன்றைய உரையை அமைத்துக் கொண்டார் மகாகவி.

ஈரோடு நகரில் அன்று நிகழ்த்தப்பட்ட ‘மனிதனுக்கு மரணமில்லை’ என்ற தலைப்பிலான இந்த உரை அன்று கூடியிருந்தோரை உரக்கச் சிந்திக்க வைத்ததாக அவ்வுரை கேட்டோர் எடுத்தியம்பியுள்ளனர்.

தமிழகத்தின் கீர்த்தி மிக்க தேசபக்தக் கவிஞர்களில் சேலம் மாவட்டம், சங்ககிரியைச் சேர்ந்த ச.து. சுப்பிரமணிய யோகியும் ஒருவர். பாரதியின் ஈரோடு உரையைக் கேட்டவர் அவர்.

பாரதியின் இவ்வுரை குறித்துக் கூறும் யோகியார், ‘நெருப்புத் தெய்வத்தை நெஞ்சிலே கொண்ட அவர் பேசும்போது உலகமே ‘கிடுகிடு’ என்று நடுங்குவதுபோல் தோன்றும். மகா காளியே ஆணுருவம் தாங்கி நம்முன் மகா தாண்டவம் செய்வது போலிருக்கும்” என்று சொல்லிக் கொண்டே வந்து ‘மூட எண்ணங்கள், முட்டாள் கொள்கைகள், மொண்டி ஞானங்கள், சண்டித் தனங்கள், குற்ற நினைப்புகள், குறுகிய நோக்கங்கள் இவற்றின் மேலெல்லாம் சீறி விழுவார். சள்ளெனக் கடிப்பார். சினத்தோடு சிரிப்பார். வெறி கொண்டவர் போல் குதிப்பார்” என்று அணுஅணுவாக அனுபவித்து வர்ணிக்கிறார்.

பாரதி பேசத் தொடங்கும் முன் நிலவிய சூழல் குறித்தும், பேச அழைக்கப்பட்ட பின்னர் நிகழ்ந்தவை குறித்தும் தனது கட்டுரையில் ஓவியமாகத் தீட்டியுள்ளார் யோகியார்.

‘மூன்று மணி நேரம் பண்டிதர்களின் மூச்சுமுட்டும் தமிழ்; அதுவரையில் பாரதி ஆடவில்லை அசையவில்லை. சுவாஸம் விட்டாரோ என்னவோ, அது கூடச் சந்தேகம். ஏதோ ஒரு சிற்பி செதுக்கிய ருத்ரன் சிலை அமர்ந்திருப்பது போல் தோன்றியது; மீசைமுறுக்கும் போதன்று வேறு யாதொரு சலனமும் கிடையாது. ஆனால் அவர் முறை வந்தது; எழுந்தார்... எழுந்தார் என்பது தவறு... குதித்தார். நாற்காலி பின்னே உருண்டது. பேச்சோ? அதில் வாசக சாலையைப் பற்றி ஒரு வார்த்தைகூடக் கிடையாது. பண்டிதர்களின் மூன்று மணி நேரப் பிரசங்கங்கள் முக்கால் நிமிஷ முடிவுரை கூடப் பெறவில்லை. எடுத்த எடுப்பிலேயே ‘நான் மனிதனுக்கு மரணமில்லை என்கிறேன்” என்றார். அவ்வளவுதான். பாடலானார். அடாடா! அவர் பாடும் போது கேட்க வேண்டும். அது என்ன மனிதன் குரலா? இல்லை இடியின் குரல், வெடியின் குரல், ‘ஓ ஹோ ஹோ’ வென்றலையும் ஊழிக்காற்றின் உக்ர கர்ஜனை; ஆனால் அவைகளைப் போல் வெறும் அர்த்தமில்லாத வெற்றோசை யல்ல; அர்த்தபுஷ்டி நிறைந்த அசாதாரண வீர்யத்தோடு கூடிய வேதக் கவிதையின் வியப்புக்குரல்“ என்று வியந்து வியந்து கண்ட காட்சியை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் யோகியார்.

1921ம் ஆண்டு ஜூலை 31ம் தேதி நடைபெற்ற இக்கூட்டத்தில் பாரதியின் உரையைக் கேட்ட சான்றோர்கள் தாம் கூறிய கருத்துகள் குறித்து விவாதித்து ஏகோபித்து அங்கீகரித்ததாகவும், பாரதியாரே பிறகு எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பாரதியின் உரையைக் கேட்ட பெரிய வித்துவான்கள், பண்டிதர்கள், தேச பக்தர்கள் யாவரும் அதே ஈரோடு நகரில் உள்ள வாய்க்கால் கரையில்

அடுத்தநாள் இன்னொரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்வதாகவும், அதிலும் பாரதியார் வந்து உரையாற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். பாரதியாரும் அதற்குச் சம்மதித்து அக்கூட்டத்தில் 'இந்தியாவின் எதிர்கால நிலை' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

ஈரோடு நகரில் நடைபெற்ற இந்த இரண்டு உரைகளுக்குப் பின்னர் சென்னை சென்ற பாரதியார் வயிற்றுக் கடுப்பு நோயால் பெரிதும் பாதிக்கப்பட்டு பெரும் துன்புற்றார். மேலும் நலிவடைந்து செப்டம்பர் 11ம் தேதி பின்னிரவு 1 மணியளவில் பாரதியின் உயிர் பிரிந்தது.

ஈரோடு நகரில் ஆற்றிய உரைதான் பாரதியின் இறுதிப் பேருரை! இந்தியாவின் எதிர்கால நிலையைப் பற்றியே எண்ணி எண்ணி வாழ்ந்த இம்மாபெரும் மனிதனுக்கு மரணமென்பதே இல்லை! அவரது வைரம் பாய்ந்த பாடல் வரிகளால் மக்கள் மனங்களில் நீடூழி வாழ்வார்.

(பாரதி நினைவு நாள்.. செப்டம்பர் 11)

மை டியர் காம்ரேட்ஸ்-1

# நாம் நினைத்தால் நம்மால் முடியும்

இப்பொழுதெல்லாம் போராட்டம் என்ற அறிவிப்பு கேட்டாலே அரசு ஊழியர்கள் முணுமுணுக்க ஆரம்பித்து விடுகிறார்கள். ''சங்கத்துக்காரங்களுக்கு வேற வேலையே இல்லீங்க. எத்தனை தான் போராட்டம் நடத்தினாலும் அரசாங்கம் எதையும் தருவதற்கு தயாராக இல்லாத நிலையில் இந்த போராட்டங்கள் தேவைதானா?'' என்ற கேள்விகள் கேட்கின்றன. சங்க நிர்வாகிகளுக்கும் தர்மசங்கடம். சங்கத் தலைமை இன்னொரு போராட்டத்தை அறிவித்திருக்கிறது. போராட்டங்களின் மீது நம்பிக்கை இழந்துவரும் அரசு ஊழியர்களை அலுவலகத்திலிருந்து போராட்டகளத்திற்கு அழைத்து வருவது பாகிஸ்தானுடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு போவதற்கு ஒப்பான முடிவாகும் என்கிற மனநிலையோடே கூட்டத்திலிருந்து வெளி வருகிறார்கள்.

இது இன்றைய நிலைமை. ஆனால் கடந்தகால வரலாறுகளை கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம். 1988 அரசு ஊழியர் ஆசிரியர் போராட்டம் எந்த வித அடக்குமுறைக்கும் பணியாமல் நடைபெற்ற போராட்டம். ஆண் ஊழியர்களைவிட பெண் ஊழியர்கள் அதிக அளவில் பங்கு கொண்டு சிறைக்கு சென்ற போராட்டம் அது. சில பெண் ஊழியர்களுக்கு சிறையிலேயே பிரசவம் ஆன நிகழ்வுகளும் நடந்தது. அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் பிடிவாதத்தை போர்க்குணத்தை கண்டு அரசாங்கம் பயந்தது அப்போது. நிறைமாத கர்ப்பிணிப் பெண்களும் போராட்டக் களம் கண்டதோடு மட்டுமல்லாமல் சிறைக்கும் வரத்துணிந்த சம்பவம் அரசாங்கத்தை புரட்டிப்போட்டது. அந்தப் போராட்டம்தான் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ஒரு கௌரவமான ஊதியத்தைப் பெற வழி செய்தது.

அடுத்து ஒரு போராட்டம் 2003ல் அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் தங்கள் உரிமைகளுக்காக தெருவீதிகளில் இறங்க வைத்த போராட்டம். ஒரே அரசாணையில் 1,86,000 அரசு ஊழியர்களை டிஸ்மிஸ் செய்ய வைத்த போராட்டம். இந்தப் போராட்டத்தையும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் உச்சநீதிமன்றம் வரை சென்று எதிர்கொண்டனர். சங்கத் தலைமைகளின் முயற்சியால் டிஸ்மிஸ் செய்யப்பட்ட அனைத்து ஊழியர்களும் மீளப் பணியமர்த்தப்பட்டனர். அவர்கள் மீதான துறைவாரி நடவடிக்கைகளும் கைவிடப்பட்டன. அரசு ஊழியர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் திரும்ப வழங்கப்பட்டன. 1988, 2003 போராட்ட அணுகுமுறைகளுக்குச் சற்றும் குறைவில்லாத சொல்லப்போனால் அதைவிட உக்கிரமானதொரு போராட்டம் 2017ல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களால் நிகழ்த்தப்பட்டது.

நீதிமன்றத்தின் தடையையும் மீறி நடத்தப்பட்ட அந்தப் போராட்டம் தலைமைச் செயலாளரை நீதிமன்றத்தின் முன் நிறுத்த வைத்ததோடு மட்டுமல்லாமல் அரசு ஊழியர்களுக்கான ஊதிய மாற்றத்தை ஏற்படுத்தி தர அரசாங்கத்தை பணிய வைத்த போராட்டம். அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நடத்திய போராட்டங்களில் எப்போதும் நினைவில் நிற்கக்கூடிய முக்கிய போராட்டம் அது.

ஆனால் 2019 அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நடத்திய போராட்டம் அரசாணை எண் 56 மற்றும் அரசு பள்ளிகளை மூடுவது, அரசு துறைகளை தனியார் மயமாக்குவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டதற்கு எதிராக வடிவமைக்கப்பட்ட போராட்டம். எதற்காக இந்த போராட்டம் என்பதை மக்களிடம் அரசு ஊழியர்கள் கொண்டு சேர்ப்பதற்குள் அமைச்சர்களும், அதிகாரிகளும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அதிக சம்பளம் கேட்டு போராடுகிறார்கள் என்ற பொய்ப் பிரச்சாரத்தை திரும்பத் திரும்ப கூறி இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் அரசுப் பள்ளிகளை மூடும் அரசாங்கத்தின் நடவடிக்கையை எதிர்த்து வடிவமைத்த போராட்டத்தை மழுங்கடிக்க செய்தார்கள்.

மேலும் அந்த போராட்ட காலம் மாணவர்களின் தேர்வு காலமாக இருந்ததால் மக்கள் மற்றும் மாணவர் நலன் கருதி அதை திரும்பப் பெறப்பட்டது. இது அரசு தரப்பில் பெரிய வெற்றியாக சிலாகிப்பது மட்டுமல்லாமல் இனிமேல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் போராட்டம் நடத்தி எல்லாம் அரசாங்கத்தை பணியவைக்க முடியாது என்றும் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். இதை நினைக்கும்போது எங்கேயோ படித்த ஒரு உண்மைச் சம்பவம் நினைவுக்கு வருகிறது.

“மைக்கேல் ஸ்டோன் என்கிற 14 வயது சிறுவன் 17அடி தாண்டி, போல்வால்ட் விளையாட்டில் ஒரு உலக சாதனையை ஏற்படுத்தினான். மைக்கேல் ஸ்டோனால் இது எப்படி முடிந்தது என்று பலரும் வியந்தனர். மூன்று மாதங்கள் கழித்து மைக்கேல் ஸ்டோன் தன்னுடைய தாயிடம் சென்று தான் ஏற்படுத்திய 17 அடி சாதனை போதவில்லை 17 அடி 4½ அங்குலம் தாண்டுவதற்கு முயற்சிப்பதாக கூறினான். கூடவே அவன் தன் தாயிடம் ''அம்மா இது என்னால் முடியுமல்லவா?'' என்று கேட்டான். அதற்கு அந்தத் தாய், ''மகனே, நீ உன்னை ஒரு பருந்தைப் போல நினைத்துக் கொள். பருந்தைப் போல பற. உன்னால் முடியும் என்று நீ நினைத்தால், நிச்சயம் உன்னால் முடியும்.'' என்றாள். கூடவே அவன் தந்தை ''உனக்கு இது வேண்டுமென்றால் இதைச் செய்து முடி.'' என்று உற்சாகப்படுத்தினார். மைக்கேல் இடைவிடாது பயிற்சி செய்தான். மூன்று மாதங்கள் கழித்து 17 அடி 4½ அங்குலம் தாண்டி சாதனை செய்தான். பெற்றோருக்கு மகிழ்ச்சி மற்றவர்களுக்கு வியப்பு.

மீண்டும் மூன்று மாதங்கள் கழித்து மைக்கேல் தன் தாயிடம் சென்று தான் 17 அடி 9½ அங்குலம் தாண்ட விரும்புவதாகச் சொன்னான். இப்போது தாய் கேட்கிறாள் ''உன்னால் இது முடியுமா?'' அதற்கு மைக்கேல் சொன்னான் ''நான் பருந்தைப் போல் என்னை நினைத்துக் கொள்கிறேன். என்னால் முடியும்.'' என்கிறான். ''உன்னால் முடியும் என்று நீ நம்பினால் நிச்சயம் உன்னால் முடியும் செய்.'' என்று பெற்றோர் அவனை உற்சாகப்படுத்தினர். அடுத்த மூன்று மாதங்கள் மைக்கேல் இடைவிடாது கடுமையாக முயற்சித்தான்.

ஒருநாள் சுமார் 30 ஆயிரம் பார்வையாளர்கள் முன்பு, 17 அடி 9½ அங்குலம் தாண்டும் நிகழ்ச்சியை அவன் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவன் பெற்றோர் ஏற்பாடு செய்திருந்தனர். பெற்றோருக்கும் மற்றவர்களுக்கும் ஒரே வியப்பு ''இது மைக்கேலால் எப்படி முடியும்?'' என்று. ஆனால் மைக்கேல் எந்தவித சலனமும் இல்லாமல் தன் மனதுக்குள் சொல்லிக்கொண்டான், ''நான் தோற்க மாட்டேன். கண்டிப்பாக இதை செய்து முடிப்பேன்.'' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டான்.

அடுத்த வினாடி, 30 ஆயிரம் மக்கள் ஆர்ப்பரிக்க மைக்கேல் ஓடினான் 'போலை' ஊன்றிக்கொண்டு மேலே சென்று, 17 அடி 9 1/2 அங்குலம் தாண்டி மறுபக்கம் விழுந்தான். 30 ஆயிரம் பேர்களும் எழுந்து நின்ற கரகோஷம் செய்தனர். மைக்கேலால் தன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பூமியில் புரண்டு அழுதான். கன்னங்களில் நீர் வழிந்தோடியது. ஓடிவந்து அவனைக் கட்டிக்கொண்ட பெற்றோர்களைத் தழுவிக்கொண்டான் 'ஓ' வென்று அழுதான்.

மைக்கேலின் அழுகைக்குக் காரணம், அவன் **“பிறவியிலேயே கண்பார்வை இழந்தவன்”**. அவன் செய்த சாதனையை அவனால் பார்க்கமுடியவில்லையே என்ற ஆதங்கங்கத்தின் வெளிப்பாடு - அவன் கண்ணீர். ஆனால் என்ன, அவனை, அவன் சாதனையை இந்த உலகமே உற்றுபார்க்கிறதே'' என்று அந்தக் கட்டுரையை முடிக்கிறார் கட்டுரையாளர்.

தன்னுடைய சாதனையை மக்கள் எப்படி ரசிக்கிறார்கள் என்பதை பார்க்க முடியாத ஒருவன் கடுமையான பயிற்சிகளும் முயற்சிகளும் செய்து எப்படி அதை முடித்தான். இதை அவனிடம் கேட்டபோது ''நான் பிறவியிலேயே கண்களை இழந்தவன். என்னால் எதுவும் செய்யமுடியாது என்று சிலபேர் சொல்லிக்கொண்டே இருந்தார்கள். அவர்களுக்கு பதில் கூற விரும்பினேன். அவ்வளவுதான்.'' என்றான் மைக்கேல் ஸ்டோன். இந்த சம்பவத்தைப் படித்ததும் புல்லரித்துவிட்டது எனக்கு.

மைடியர் காம்ரேட்ஸ், மைக்கேல் ஸ்டோன் தன்னை ஏளனமாகப் பார்த்தவர்களுக்கு தன் இடைவிடாத பயிற்சியின் மூலம் கூறிய பதிலை. நம்முடைய நியாயமான உரிமைகளை தரமறுத்து நம்மை ஏளனமாக நினைப்பவர்களுக்கு நம் சமரசமில்லா போராட்டங்கள் மூலம் கூறமுடியாதா என்ன? **- ஜிஜி**

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com